www.padippakam.com

உழைக்கும்
# மக்கள் தமிழகம்

3-2,3

மேழம் (பிப். – ஏப். 1999)

விலை : உரு. 5.00



# வேதமொழியின் வேரறுப்போம்

## பீகார் – நடந்ததும், நடக்க வேண்டியதும்

தமிழக அரசியல் பண்பாட்டு விடுதலை மாத இதழ்

www.padippakam.com

## சிதை...

அவள்
உயிரை
உலுக்கிவிட்டு...

இந்துவெறியின்
விந்துத் துளிகள்
கந்தகமாய்...
கந்தகமாய்...அவள்மீது
தெறிக்க...

அந்த
ஒரிசாவின்
ஓலம்... எங்கள்
பழகிய
பார்வைக்குப்
புதியதாய் இல்லை...

எங்களை
தொடாத கொடுமை
தொடர்ந்திருக்க...
தொட்ட கொடுமையாகப்
பட்டு மடிந்த
பரிதாபம்...

ஒரிசாவின்
ஓலம்... எங்கள்
பழகிய
பார்வைக்குப்
புதியதாய் இல்லை...

தொட்டதும்
தீட்டு' எனினும்
பொட்டு கட்டிய
பொத்தல் சட்டம்...
பரம்பரையாய்
பட்டுத் தீர்ந்த
கொடுமை...

கண்ணீர்
சுரப்பிகள்
வறண்டு போகின்றன...

கொடுவெறியின்
கொள்ளிக் கட்டை... அவள்
உடலைத் துளைத்து
உள்ளே நுழைய... தன்

உயிர்போக்க ஓடுகிறாள்...
ஊருக்குக் கூட்டிவந்தால்,
உருவாகும்
கருவென்று வாடுகிறாள்...
கருவைச் சிதைக்க
எள்ளையும்
பப்பாளியையும் தேடுகிறாள்!

கொடுவெறித்தனத்தின்
கொள்ளிக்கட்டை...,
அள்ளி அழித்த
அத்தனைப் பெண்களும்...
அய்யோ...

சேரியில்தான்!
காமவெறியின்
கால்களுக்கிடையில்
செத்து மடிந்த
அத்தனை உயிரும்
சேரி' எனினும்

'ஆணாதிக்கம்' என்று
இந்து வெறியின்
காம வெறிக்கு...
'பெண்ணடிமை'
பெயிண்ட் அடித்து
தனிமைப் படுத்தின
தன்னார்வக் குழுக்கள்...

கண்ணீரைக்
காசாக்கி...
'நடுநிலைத் தன்மையை'
நடித்துக் காட்டின
நாளேடுகள்...

முடிமறைக்கும்
வழக்கமான
வேலையைச் செய்தது
வெட்கம் கெட்ட, அவள்
ஆளும் அரசு...

அய்யோ....
போதும்!

ஆயிரம் கால
ஆதிக்கத்தைச் சுமக்கவே
நான்கு கால்கள்
வேண்டிய நிலையில்...

தோழீ...
உன் கருப்பையில்
இன்னொரு சுமையா?
வேண்டாம்!

சிதைத்துவிடு...

இந்த
இந்துக் கருவைச்
சிதைக்க...
எள்ளும் பப்பாளியையும்
எள்ளளவும் எடுக்காதே...

உதைக்கும், நம்கால்கள்
சிதைக்கும்' என்று
நம்பு...

- ஒப்பாரி -

## சட்டம்

அடிமை விலங்கொடிக்க
திமிரியெழுந்து
திருப்பியடித்தாய்...வன்முறை.

அடிமைச் சாதிக்கு
உரிமை முழக்கமா...?
குரல்வளை நெறித்து
"குண்டா"வில் போடு.

தாழ்ந்தவனுக்கென்ன
தடைமீறி ஊர்வலம...
"தடா"வில் போடு.

பொது அமைதி
கெடுத்தானெனப்
"பொடா"வில் போடு.

கூடவோ..பேசவோ..கூடாதென
முன்னறிவிப்பின்றி
முப்பத்திரண்டைப் போடு.

அச்சிடவோ...ஒட்டிடவோ...
அனுமதி மறுத்து...
அச்சக உரிமையைப் பறி.

எழுதும் முன்னும் பின்னும்
என்னிடம் கேள்
சிந்திக்க வேண்டாம்
செத்த பிணமாயிரு.

ஒன்னுக்குப் போகணுமா...
உறுப்பைப் பிடிக்கணுமா...
என்னிடம் கேள்.

-உஞ்சைராசன்.
மதுக்கூர்.



படிப்பகம்

www.padippakam.com

உழைக்கும்

மக்கள் தமிழகம்

25

தொடர்புக்கு :
183, வெங்கட்டரங்கம் தெரு,
சென்னை – 600 005.

இதழ் குழு

பொழிலன்

இளங்கோவன்

செல்வி

செந்தழல்

மார்க்க வேனில்

# இந்தியக் கட்சிகளுக்கு மட்டுமில்லை - இந்திய சிந்தனைக்கே தோல்வி வேண்டும்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிற ஆட்சிக்கான குடுமிப்பிடிகள் வேடிக்கையானவை.

உணவு இல்லாமல், பஞ்சப் பராரிகளாக உள்ள அறுபது விழுக்காட்டு மக்களை எப்படி உருப்படுத்துவது என்பதற்காகவோ, இந்தியாவிற்குள் உள்ள தேசிய உரிமைகளை எப்படி ஒழுங்கு செய்வது என்பதற்காகவோ, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை ஒழித்து மக்கள் நல உரிமைகளை மீட்டெடுக்க வேண்டுமென்கிற நிலைக்காகவோ - யார் தலைமை அமைச்சர் என்று இக்குடுமிப்பிடி போராட்டங்கள் நடந்துவிடவில்லை.

இம்மக்களை அடக்கி ஆண்டு, சுரண்டிக்கொழுக்கவே இவர்கள் கட்டிப்புரளுகிறார்கள்.

பச்சோந்தித்தனம், சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் - என்று எல்லா விவரங்களிலும் எல்லா கட்சிகளும் பங்கெடுத்துக் கொண்டு தலைமைப் பொறுப்புக்கு ஆளாய் அலைகின்றன.

அமைச்சர் பதவி, ஆதிக்கவெறி, சுரண்டல் இவை தவிர இக்கட்சிகளின் மூளைக்குள் எதுவும் இல்லை. இதன் அடிப்படை சிதையாமல் இருக்க - மக்களை நசுக்கிப் பிழிய, சிந்தனையை மழுங்கடிக்க, மக்களுக்குள் மோதலை உருவாக்க - இந்த ஆதிக்க வெறியர்கள் கையாளுகிற தந்திரமே மதவெறி, சாதிவெறி போன்றவை.

சாதிவெறியால் கூட்டணி சேருகிறவர்கள் மதவெறியர்களை எதிர்ப்பதும், மதவெறியால் கூட்டணி அமைத்துக் கொள்பவர்கள் சாதிவெறியர்களை எதிர்ப்பதுமாய் நாடகமாடுகின்றனர்.

தமிழக அரசியல் பெருச்சாளிகளெல்லாம் அவர்களோடு ஒட்டுண்ணிகளாய்ப் போய்த் தாங்கிப் பிடித்து - இந்திய ஆதிக்கவெறி அரசமைப்பிற்கு அரணமைக்கின்றன - இந்தியப் பார்ப்பனியத்தின் அடி தாங்குகின்றன.

இந்தியாவிற்குள் இருக்கிற பல்வேறு தேசிய இனச்சார்பில் எழுந்துள்ள கட்சிகளின் துணையில்லாமல், இனி இந்தியக் கட்சிகள் எதுவும் வெற்றியடைய முடியாது.

அதேபோல இன்றைக்கு இந்தியாவிற்குள் இருக்கிற பல்வேறு தேசிய இனச்சார்பில் உள்ள தேசிய கட்சிகள் மட்டுமே இணைந்து இந்தியப் பாராளுமன்றத்தை ஆளுமை செய்வதையும் இந்தியப் பார்ப்பனியம் ஏற்றுக் கொள்ளவில்லை.

கோடிக் கோடியாய்ச் செலவு செய்கிற தொலைக்காட்சிப் பரப்பல்களாலும், கிரிக்கெட் விளையாட்டுகளாலும் இந்தியப் பார்ப்பனியத்தின் ஒற்றுமை என்பது வென்றுவிடவில்லை. இந்திய நலன் என்று ஒன்றை எவ்வளவுதான் வலியத் திணித்தாலும் அதை மக்கள் உளவியலாய் ஏற்றுக் கொள்ளவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பனியக் கலாச்சார, கருத்தியல் வரலாறு , வாழ்வியல் மட்டுமே இந்தியா என்கிற தெளிவு மக்களிடையே பரவலாய்க் கிளம்பியுள்ளது.

இந்திய அரசியலும், இந்திய விளையாட்டுக் கூத்துகளும் நமக்கானது இல்லை அவர்களுக்கானது என்று எண்ணுகிற ஏழையின் எண்ணங்கள், இன்றைக்கு இந்தியாவும் நமக்கானதல்ல என்கிற அளவில் விரிந்திருக்கிறது.

"தெரிந்தோ தெரியாமலோ எனக்கு இந்தியப் பற்றில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பில்லை; இந்தியாதான்" - என்று அம்பேத்கர் சொன்ன சொற்றொடர்கள் இன்றைக்குத் தாழ்த்தப்பட்டமக்களின் பரவலான எண்ணமாகவே இருக்கிறது.

மக்களிடம் பரவலாய் இப்படி எண்ணங்கள் இருப்பினும், அரசியல் ஒட்டுண்ணிகளாய், ஆதிக்க வெறியர்களின் சேவகர்களாய் இந்தியப் பார்ப்பனியத்துக்கு அடிதாங்குகின்ற உணர்வுகள் தேர்தல் அரசியல் கட்சிகளிடையே ஒழிந்தபாடில்லை.

இவர்கள் வழிகாட்டிய தமிழிய உணர்வில் தமிழ்நாட்டு மக்கள் இருக்க, இவர்கள் மட்டும் தில்லி பாராளுமன்றத்தாலேயே எல்லாம் முடியும் என்கிறபடி தில்லி வாயில்களிலேயே வாழத் தொடங்கிவிட்டனர்.

தில்லிக் கொழுப்பூறிய இவர்களின் உடல்களுக்குள் தமிழக உரிமைகள் எங்கே தெரியப்போகிறது.

வடக்கு வாழ்கிறது - என்று பேசிய இவர்கள் வடக்கில் வாழத் தொடங்கிவிட்டனர்.

தமிழகத்திற்கு இந்தியப் பாராளுமன்றம் - எதற்கு? - என்பது பற்றியோ, தமிழகத்தின் அரசியல், வாழ்வியல், பொருளியல், அரசியல் உரிமைத்தலைமையகமே தமிழகம்தான் என்று எண்ணி, - அந்தக் கோணத்தில் தில்லியை - தில்லிப் பாராளுமன்றத்தைப் புறக்கணித்திடல் வேண்டும் என்றோ அவர்கள் எண்ணுவதில்லை.

அவற்றைப் புறக்கணிக்காமல் - நமக்கு இங்கு உரிமை இல்லை என்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை.

எனவே, பெருச்சாளிகளின் கூட்டுக் கொள்ளையில் சிந்தியதைப் பொறுக்குகிற உணர்வுகளை ஒழித்து - இப்பெருச்சாளிக் கூட்டங்களையே அடித்து விரட்டாமல் நமக்கு விடுதலை இல்லை.

அந்தக் கொள்ளையர்கள் இந்தியக் காங்கிரசோ, பா.ஜ.க.வோ, இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளோ, மட்டுமல்ல - அங்கு போய்ப் பதவிப் பங்குக்காக அலைந்து கொண்டு தமிழக ஏழை மக்களைக் காட்டிக் கொடுக்கவும்,அடிமைப்படுத்தவும் செய்கிற தி.மு.க., அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க.-வும் தாம் இந்தியப் பார்ப்பனியக் கொள்ளையர்களாகவே மாறிவருகின்றனர்.

அத்தகைய அவர்களின் இந்திய சிந்தனையுடன் நாமம் மாறிப் போகாமல், இந்தியப் பார்ப்பனியச் சிந்தனையை வேரறுத்திட வேண்டும்.

அந்த இந்தியச் சிந்தனைக்குத் தோல்வி ஏற்படாமல் இங்கு இந்தியப் பார்ப்பனியம் ஒழியப்போவதில்லை. தமிழக - மற்றும் பிற தேசிய இன மக்களின் உரிமை வாழ்வு மலரப் போவதில்லை.

எனவே அத்தகையவர்களை மறுப்பதும், அத்தகைய ஆளுமைச் சிந்தனையை மறுப்பது என்பதுமே தமிழக உழைக்கும் ஏழை மக்களின் வாழ்வுக்கான விடிவாக முடியும்.

## பௌத்தப் பெரியவர்

# மு. சுந்தரரசனார் மறைவு

தாழ்த்தப்பட்ட மக்களின் மீட்சிக்காக எந்த வகையிலும் நெகிழ்வின்றிப் பாடுபட்ட பௌத்தப் பெரியார் மு. சுந்தரரசனார் 17-4-99 அன்று மாலை மறைந்தார். அவரின் இறுதி நிகழ்ச்சி 18-4-99 அன்று நடைபெற்றது. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்ததோழர்களும் பெரியவரின் இறுதி நிகழ்ச்சியில் பெருந்தி ரளாய்ப் பங்கேற்றனர். த.ஒ.வி.இயக்கமும், மக்கள் தமிழகமும் அவருக்குத் தன் வீரவணக்கத்தைச் செலுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# வேதமொழியின் வேரறுப்போம்!



இன்று நேற்றல்ல... காலங்காலமாய்ப் பார்ப்பனீயம், பண்பாட்டடிப்படையில் தன் ஆளுமையை நிலைநிறுத்திக்கொள்ள வெறியாட்டம் போடுகிறது.

தமிழிய எழுச்சியாலும், சாதி ஒழிப்புக் கிளர்ச்சியாலும் அடங்கிக் கிடந்த பார்ப்பனியம் இன்றைக்கு அவற்றையும் தனக்குச் சாதகமாய் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு தன் ஆளுமையைத் தக்க வைத்துக் கொள்வது என்கிற வழி கண்டறிந்துள்ளது.

சாதி ஒழிப்பை வெளியில் பேசி, உள்ளுக்குள் சாதியாய் இயங்குகிற திராவிட, பொதுவுடைமைக் கட்சிகளின் வழிகாட்டலில்-பார்ப்பனியமும், சாதி ஒழிப்பைப் புறத்தே பேசி, உள்ளீடாக சாதிக் கலவரங்களுக்கு வித்திடுகின்றது.

அண்மையில் நடந்த தென் மாவட்டக் கலவரத் தூண்டல்களுக்குப் பெருங்காரணம் ஆர்.எஸ்.எஸ்-சும் பிற ஹிந்துவெறி இயக்கங்களுமே ஆகும்.

அம்பேத்கர் சிலைகளை இழிவுபடுத்திக் கலவரத்தைத் தூண்டிய பல நிகழ்வுகள் இந்த வெறி அமைப்புகளின் பங்கில் சாதிய உணர்வினராலேயே நடத்தப்பட்டது.

இப்படியாகப் பல எடுத்துக்காட்டுகள் இருக்க, இந்நடைமுறைகளின் மைய அச்சாக 'சமஸ்கிருதம்' சக்கரமாய் இருந்து பார்ப்பனியத்தோடு சுழலுகிறது.

மொழி வழி, சாதி வழி, மதவழி, இந்தியப் பார்ப்பனிய வழிகளில் சமஸ்கிருத ஆளுமை என்பது மைய அச்சானது.

**மொழிவழி :**

தன்மொழி தேவபாஷை என்றும், தேவர்கள் மட்டுமே பேசுகிற, பேச வேண்டிய மொழி என்றும் ஓதுகின்றது. இந்தமொழியைப் பிறர் பேசக்கூடாது என்றும், சமஸ்கிருதம் படித்தால் படிப்பவர்களின் நாக்கை அறுக்க வேண்டும் என்றும் வெறியாய்க் கூச்சலிடுகின்றது. சமஸ்கிருதம்தான் உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி என்றும், அதனின்றுதான் எல்லாமொழிகளும் பிறந்தன என்பதாகவும் உலக அளவில் மொழியியலாளர்களையெல்லாம் நம்பவைத்திருக்கிறது.

சமஸ்கிருத வளர்ச்சிக்காக ஆண்டுக்கு ஆயிரங்கோடி ருபாய்க்கு மேலாக இந்த ஏழை எளிய மக்களின் வரிப்பணத்தைச் செலவழிக்கின்றது. சமஸ்கிருத அகராதிகள் தொகுக்கவும், கலைக் களஞ்சியங்கள் தொகுக்கவும் என ஆயிரக்கணக்கான பார்ப்பனர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுத்து பத்தாயிரம் இருபதாயிரம் என அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றது. சமஸ்கிருதக் கல்லூரிகளை நூற்றுக்கணக்கில் தொடங்க துணை செய்து, அங்கு பணி செய்யும் ஆசிரியர்க்குச் சம்பளமும்,மாணவர்களுக்குச் சலுகைத்தொகை என்றும் கோடானகோடி செலவழிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள ஏறத்தாழ 130-பல்கலைக்கழகங்களில் 90 விழுக்காட்டுப் பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதத் துறை என்று ஒன்றை ஏற்படுத்தி அதற்கெனப் பலகோடிகள் செலவழிக்கப் படுகிறது. இந்தியாவில் உள்ள பதினெட்டு மொழிகளைத் தேசிய மொழிகள் என்று அறிவித்துவிட்டு 'சமஸ்கிருதத்தில்' மட்டும் தில்லியிலிருந்து தொலைக்காட்சி, வானொலி செய்திகள் வாசிக்கப்படுகின்றன.

இந்தியா முழுமையும், ஏன் உலகம் முழுமையும் சமஸ்கிருதத்தைத் தன் தாய் மொழியாய்ப் பேசத் தெரிந்தவர்கள் என்று 1500-பேரே குறிப்பிட்டிருக்கின்றனர். மற்றவர்களுக்கு சமஸ்கிருத மந்திரங்கள் தெரியுமே அல்லாமல் வாழ்வியல் அளவில் பயன்படுத்துவதற்கு அம்மொழி தெரியாது.

இந்த அளவில், ஆண்டு கொழுத்துள்ள மொழி ஆதிக்கத்துக்கு, இந்த ஆண்டு சமஸ்கிருத ஆண்டு என்கிற சிறப்பை வேறு இந்தியப்



படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனிய அரசு செய்துள்ளது: மக்கள் வழக்கில் இல்லாத, ஆதிக்கத்திற்கானதாகவே இருக்கிற ஒரு மொழியின் ஆளுமையை எப்படி நாம் ஏற்க முடியும்? அதன் ஆதிக்கத்திற்கு எதிராக அணிதிரளாமல் நம் வாழ்க்கை மொழிகள் எப்படி வாழ முடியும்?

**சாதிவழி:**

மொழிவழி நேரடியாக இந்த அளவு ஆதிக்கப் போக்குகள் இருக்க, சாதிவழிப்பட்டு சமஸ்கிருத ஆளுமை என்பதோ கொடுமையானது. மக்களைக் குலப்பிரிவுகளாய்ப் பகுப்பது. தீண்டப்படாத மக்கள் என்று ஒதுக்கி வெறிக்கூச்சலிடுவது.

சமஸ்கிருதம் வாழ்வதே வேதத்திலும், புராண-இதிகாசங்களிலும்தான். சமஸ்கிருத இலக்கண இலக்கியங்கள் என்பவை அனைத்தும் மக்களைக் குலப்பிரிவுகளாக ஆக்குவது எப்படி என்றும், குலப்பிளவுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களை ஆதிக்கம் செலுத்துவது எப்படி என்பதையுமே பெரிதும் விளக்குகின்றன. இவற்றையெல்லாம் தேவர்கள் சொன்னதாகவும், கடவுள்கள் அவதாரங்களாய் வந்து சொன்னதாகவும் புளுகிக் கொட்டியுள்ளன.

அதை யாரும் படித்து விடக்கூடாது என்பதற்காக அப்படி படிப்பவர்களின் நாக்கை அறுக்கவும், கேட்பர்களின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமாயும் சட்டமியற்றி நடைமுறைப்படுத்தினர்.

சாதிவழித் திருமணச் சடங்குகள், கருமாதிகள், பெயர் வைப்பது என்று எதற்கெடுத்தாலும் சமஸ்கிருதமே ஆளுமையில் இருக்கிறது.

அவற்றின் பொருள் இழிவானவை என்பது மட்டுமல்ல நம்மை அடிமைப்படுத்தவும் செய்கின்றன.

கேசவன் (மயிரான்), சுப்பிரமணியன் (பிராமண நல்லடிமை), சூர்ப்பநகை (முறம் போன்ற பல்லுள்ளாள்), மண்டோதரி (பானை வயிறுள்ளவள்), தருமலிங்கம் (தருமம் செய்கிற குறியுள்ளவன்) இப்படியாகச் சமஸ்கிருதத்தில் பெயர்வைத்துக் கொள்வதை நாம் ஏற்றுக் கொண்ட வகையில் நாம் அடிமைகளாய் ஆக்கப்பட்டிருக்கிறோம்.

*"தாழ்த்தப்பட்ட ஈனசாதியினர் பிணத்தின் மீதுள்ள துணிகளைத்தான் உடுக்க வேண்டும். எச்சில் உணவைத்தான் சாப்பிட வேண்டும், ஊருக்கு வெளியில்தான் குடியிருக்க வேண்டும்"*

## "செத்த மொழி"

*இந்த நாட்டில் பல காலமாக 'சமஸ்கிருதம்' என்கிற ஒரு வடமொழியை (ஆரிய மொழியை) ஆரியர் இந்நாட்டில் புகுத்தி,அதற்குத் 'தேவபாஷை' எனப் பெயரிட்டுக் கடவுள்கள் தேவர்கள்,சமயம், சாத்திரம் ஆகியவைகளுக்கு அதில் சொன்னால்தான் புரியும் - பயன்படும் என்று காட்டி நமது பரம்பரை இழிவிற்கு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தருகிறார்கள்.*

*இந்நாடு நம்முடைய நாடு. இந்நாட்டில் நாம் தமிழர்கள் 100க்கு 97 பேர்கள் வாழ்கிறோம். நமது நாட்டு மொழி தமிழ்மொழி. இந்த நிலையில் நமதுமொழிக்கும் நம் கலாச்சாரத்திற்கும், நம் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமில்லாத - நம் நாட்டு மக்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 பேராக உள்ள - இந்நாட்டிற்குப் பிழைக்க வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களுடைய தாய்மொழியாக உள்ளதும், எழுத்தே இல்லாததுமான சமஸ்கிருதம் என்னும் மொழிக்கு இன்று இருந்து வரும் செல்வாக்கு, தமிழுக்கு உண்டா!...*

*....திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1937ல் இந்தியைக் கொண்டு வந்ததன் உள்நோக்கமே சமஸ்கிருதத்துக்குச் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து வருவதைத் தடுத்து அதை உயர்த்தவும், அந்த சமஸ்கிருத எதிர்ப்பு உணர்ச்சியை அழிக்கவுமேயாகும்.*

*தமிழ்நாட்டில் 'சமஸ்கிருதம்' என்ற ஒரு மொழி உண்மையிலேயே தேவைதானா? எதற்காவது பயன்படுகிறதா? அதற்கும் நமக்கும் கடுகத்துணையளாவது, எதிலாவது ஒற்றுமை - பொருத்தம் எவ்வகையிலாவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.*

*சமஸ்கிருதமொழி ஒரு செத்தமொழி என்ற உண்மை எல்லோரும் மறுக்காமல் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.*

**'சமஸ்கிருதம்' குறித்துப் பெரியார்**



படிப்பகம்

www.padippakam.com



(மனுதர்ம சாஸ்திரம் -10-35,36) என்கிற சாதிவெறியுணர்வுகளுக்கே அடித்தளமிட்டது இந்தப் பார்ப்பனிய சமஸ்கிருத ஆதிக்கம்தானே.

எனவே, மக்களை வேறுபிரித்து ஒதுக்குவது, திருமண முறையில் உள்ள இதுபோன்ற இழிவுகள், பிற சடங்குகளில் சமஸ்கிருத மொழிவழிச் செய்யப்படுகிற இழிவுகள் இவற்றையெல்லாம் மறுக்காமல் நாம் சாதிவழி உய்ய முடியாது.

சாதி ஆதிக்கத்தின் வேர் பார்ப்பனியத்தால் கட்டப் பட்டுள்ளதை நாம் உணராமல் சாதி ஒழிப்பைச் செய்திட இயலாது.

ஆக சாதி ஒழிப்பின் அடிப்படைக்கூறு சமஸ்கிருத ஆதிக்கத்தை எதிர்ப்பதும் ஆகும்.

**மதம்வழி:**

இந்துமதமே பார்ப்பனியத்தின் உயிர்நாடி எனில், இந்துமதத்தின உயிர்நாடி சமஸ்கிருதம்.

இந்துக்கடவுள் சிலைகளெல்லாம் பூணூல் போட்ட சிலைகளே. அச்சிலைகளின் வழக்குமொழி சமஸ்கிருதமாம். எனவே அந்த சிலைகளை வழிபடுவது சமஸ்கிருதமாகவே இருக்க வேண்டுமாம். தமிழ்மொழி அதற்குத் தகுதியற்றதாம். தமிழ் தேவடியாள் மக்கள்பேசுகிற நீச்ச மொழியாம். இப்படியெல்லாம் சொல்லுகின்றன வேதமும், மனுதர்மமும். அதையே லோககுருக்கள் என்கிற சங்கராச்சாரிக் கும்பல்கள் கூவித்திரிகின்றன.

பார்ப்பனியத்தை, சாதியை, வர்ணாச்சிரமத்தைக் காக்கிற இந்த வேதத்துவம் என்பதே இந்துத்தத்துவம் - அந்த இந்துத்தத்துவங்களே முழுக்க சமஸ்கிருதத்தை தேவமொழியாய் ஏற்றுப் -புனிதம் என்கிற பெயரில் ஆளுமை செய்கிறது.

இந்து மதத்தின் பெயரால் அனைத்து வழக்குகளும் சமஸ்கிருதத்திலேயே நடத்தப்படுகின்றன. இந்துமதத்தின் புராணக் குப்பைகள், இதிகாசங்கள், தத்துவங்கள், இலக்கியங்கள் யாவும் பார்ப்பனியத்தின் அடித்தளத்தில் கட்டப்பட்டவையே. அக்கட்டுமானத்தின் பிணைப்பாய் - சுதையாய் (சிமெண்ட்) இருப்பதே சமஸ்கிருதம்.

ஆக சமஸ்கிருத ஆதிக்கத்தை எதிர்ப்பது, இந்துத்துவத்தை அதன் மதவெறிப் போக்கை எதிர்ப்பதேயாகும்.

## "மொழி வெறி"

வடநூல்கள் தோன்றத் தோன்றத் தென்னூல்கள் மறைந்துகொண்டே வந்திருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தென்மொழித் தொன்னூலெல்லாம் இறந்துபட்டபின், வடமொழிப் பெயர்ப்பு நூலும், புதுநூலும், முதுநூலும் மூல நூலும் காட்சியளிக்கின்றன. இது கதிரவன் இறந்தபின் திங்கள் திகழ்வதொத்ததே.

வடமொழி தமிழகத்தில் தமிழாலேயே வளர்ந்ததென்பதை, வடமொழிச் சொற்களும், வியாகரணங்களும் இசை நடகணிய மருத்துவ நூல்களும், சிவதிருமால் நெறிகளும் மட்டுமின்றி, சிறந்த வடநூலாசிரியர் பலர் தமிழ் நாட்டவராவார். 14-ஆம் நூற்றாண்டில் வேதங்கட்கு விளக்கவுரை வரைந்த சாயணாச்சாரியார் தென்னாட்டாராயிருந்ததும், இன்றும் தலைசிறந்த வடமொழிப் பண்டிதர் தமிழ்நாட்டவராயிருப்பதும் தெள்ளத் தெளியக்காட்டும்.

வடமொழி பேச்சு மொழியன்றாயினும்,பிராமணர் தம் கூட்டரவியல் மேம்பாட்டைப் போற்றிக் காக்க, இன்றும் அதில் நூலியற்றியும், கட்டுரை வரைந்தும் திருமுகம் விடுத்தும் வரவேற்பிதழ் பிடித்துக் கொடுத்தும் வருவது அவரது ஒப்புயர்வற்ற மொழிவெறியை விளக்கிக் காட்டுகிறது.

**பாவாணர்**
(வடமொழி வரலாறு)

**இந்தியப் பார்ப்பனிய வழி**

மொழிவழி, சாதிவழி, மதவழி ஆளுமை செய்துகொண்டிருக்கிற சமஸ்கிருதம் தன்னின் ஆளுமையைத் தக்க வைத்துக் கொள்வதே இந்தியம் - என்னும் பார்ப்பனியத்தின் வழிதான்.

சாணக்கியனின் 'அர்த்தசாஸ்திரம்' அவர்களின் அரசியல்வேதம், பார்ப்பனியத்தின் அரசியல் ஆதிக்கத்திற்குத் தூணாய் இருப்பன வேத, புராண, இதிகாசக் குப்பைகளே ஆகும்

அவற்றின் அரசியல் தளத்திலேயே பார்ப்பனியம் சமஸ்கிருதச் சுற்றுச் சுவரால் கட்டப்பட்டிருக்கிறது.

சமஸ்கிருதம் - பற்றிய அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய பெருமை(!)களே இந்தியக் கூட்டமைக்குள் உள்ள அனைவருக்கும் கல்வியாக்கப் பட்டிருக்கிறது.

பாரத் - என்றும் ஹிந்துஸ்தான் என்று மட்டும் அல்லாமல் இந்திய அரசியல் களத்தில் புனைந்து கொள்ளுகிற அனைத்துச் சொல்லாடல்களும் சமஸ்கிருதமே ஆகும். தூர்தர்ஷன், விதேஷ் சன்சார் பவன், இந்திரா விகாஷ் பத்ரா, பத்மவிபூஷன், பத்மபூஷன் - என்பன போன்ற ஆயிரக்கணக்கான ஆர்ப்பரிப்புகளும் சமஸ்கிருதத்திலோ அல்லது சமஸ்கிருத வழிப்பட்ட இந்தியிலேயோதான் வைக்கப்படுகிறது.

ஆக, பார்ப்பனியத்தின் வேர்க்கால்கள் சமஸ்கிருத ஆதிக்க நஞ்சிலேயே ஊறி வளர்ந்திருக்கையில், பார்ப்பனிய எதிர்ப்பென்பது சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பின் அங்கத்தைக் கொண்டதே ஆகும்.

இந்த நிலைகளை மக்களுக்கு விளக்கவும், சமஸ்கிருத ஆதிக்கவெறியினை அம்பலப்படுத்தி வேரறுக்கமான முயற்சிகள் தமிழகம் எங்கும் பரவலாய் நடத்தப்பட வேண்டுவதே இன்றைக்கு முகாமைப்பணிகளில் ஒன்றாக உள்ளது.

எனவே, இத்தகைய முழக்கத்தோடேயே தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பை வலிய ஓர் இயக்கமாக முன்னெடுத்திருக்கிறது.

அவ்வியக்கத்தின் செயலுக்கான விளக்க மாகவே மாநாட்டையும் ஒருங்கிணைத்திருக் கிறது.

**சாதி-மத-பார்ப்பனிய வெறியை வளர்க்கும்**

## சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு

- என அறிவித்திருக்கிறது.

அம்மாநாட்டின் முழக்கங்களைத் தமிழகமெங்கும் முழங்குவோம்... சமஸ்கிருத ஆதிக்க வேரறுப்போம்!

* *சாதித் தீயை ஓதி வளர்க்கும்,*
  *வேத மொழியின் வேரறுப்போம்!*
* *கருவறை இருட்டில் மதவெறியூட்டும்,*
  *தேவ பாஷையின் திமிரழிப்போம்!*
* *சரியும் தமிழகம் சரியாதுயர*
  *சமஸ்கிருத, பார்ப்பனிய முடிசாய்ப்போம்!*

## 'ஜகத்குரு'விற்கு - எதற்கு இந்தியப்பற்று?

முற்றும் துறந்த சுவாமிகள் - என்று போற்றிக் கொள்ளுகிற காஞ்சி காமகேடி சங்கராச்சாரியைச் சொல்லுகிற போதெல்லாம் 'ஜகத்குரு' - என்றும் 'லோககுரு' - என்றும் பீற்றிக் கொள்ளுகிறது பூணூல் கூட்டம்.

கழட்டிய தன் பூணூலை விட்டெறியாமல் தான் வைத்திருக்கிற கம்பிலேயே சுற்றிக் கொண்டிருக்கிற சாதி வெறியன்...

தலைக் காவிரிக்கு இளம் பெண்ணோடு ஓடிப்போய் காஞ்சிக்குத் திரும்ப மறுத்த காமவெறியன் தான் ஜகத்குருவாம்.

அந்தவகையில் ஜகத்குரு, லோககுரு என்று தன்னைச் சொல்லிக் கொள்வதோடு 'இந்தியன்' என்ற உணர்வு வந்தால் மதச் சண்டை வராது என்றும் தன் புளித்த வாயை மலர்த்தியிருக்கிறது.

கடவுள் உணர்வு இருந்தால் எல்லாம் சுபிட்சமாகிவிடும் என்று சொல்லிக் கொண்டிருந்த இந்தப் பெரியவாளோ இப்போது கடவுள் பக்தியெல்லாம் இல்லை. இந்தியப் பக்தி இருந்தால்தான் மதச் சண்டை வராது - என்கிறது இப்போது.

அவாளுக்கு கடவுள் பக்தி என்பதெல்லாம் இந்தப் பார்ப்பன பாரதப் பக்தியையும், பூணூல் ஹிந்துத்துவ பக்தியையும் நிலைப்படுத்திக் கொள்ளத்தானே.


**வீழ்ச்சியுறு தமிழகத்தில்**
**எழுச்சி வேண்டும்.**

– பாவேந்தர்

**பா. சண்முகவேல்**

கனிகள் வணிகம்

நேதாசி தினசரி சந்தை

ஈரோடை–1.

தொலைபேசி : 210038, 220150.

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com



# கலை வணிகர்கள்...

கலை கலைக்காகவா? கலை மக்களுக்காகவா? இரண்டும் இல்லை. கலை வணித்திற்காக என்று இயக்கி வருகிறது இன்றைய கலை உலகம். மக்களின் சிந்தனையை முடக்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் இன்றைய கலைத்துறையினர் அங்கொன்றும் இங்கொன்றுமான பொதுவானப் படைப்புகளைக் கொடுத்துவிட்டு மக்கள் ஏற்கவில்லை நாங்கள் என்ன செய்வது என்று மக்கள் மீதே பழியைப் போட்டுத் தப்பிக்கின்றனர்.

தமிழக மக்களின் தெருக்கூத்துகளும், நாட்டுப்புறப்பாடல்களும் இன்றைய செல்லுலாய்டு செதில்களால் அறிக்கப்பட்டு வருகின்றன.

பெண்குழந்தையைக்காக்கும் "கருத்தம்மா" பிற்படுத்தப்பட்ட சமூகத்தை எதிரொலிக்கின்றதுபோல, பொருளாதாரச் சிக்கலை "வீடு" காட்டினாலும் அது நடுத்தரர்களின் பொருளாதாரத்தையே காட்டுகிறது.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் இதுவரை இங்கு குமுகத்தில் இருக்கும் அடிப்படைச் சிக்கலான சாதிச் சிக்கலைச் சரியாகப் புரிந்து கொண்ட ஒரு படம் கூட வெளிவரவில்லையெனில் இன்றைய திரைத்துறை யாரிடம் சிறை இருக்கிறது என்பது விளங்கும். இங்கு வகை வகையாகப் பல்லாயிரம் காதல் கதைகள் பின்னப்பட்டாலும், "சாதிக் காதல்கள்" எனும் முழு பூசணைக்காய் குவியல்களைக் கைப்பிடிச் சோற்றில் மறைக்கும் அவலங்கள்தாம் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

தமிழக இளைஞர்களிடையே பாலியல் வக்கிரங்களைத் தூண்டிக் காசு சேர்த்திட திரைத்துறைக் கொள்ளையர்கள் இப்போது நடிகை, நடிகர்களைப் பம்பாயிலிருந்து இறக்குமதி செய்து கவர்ச்சி என்கிற பெயரில் வக்கிரவெறிகளையே தூண்டிவிடுகின்றனர். இங்குள்ள பெண்ணியவாதிகள் பெரும்பாலும் பார்ப்பன நடுத்தர சிந்தனையுடைய வர்களாய் இருப்பதால் மேலோட்டமான சீர்த்திருத்தம் நாடுபவர்களாகவும் இந்துத்துவக் கட்டமைப்பை எதிர்க்காமல் அதற்குட்பட்டுச் சீர்த்திருத்தம் பேசி திரிகிறதால் இவற்றையெல்லாம் வலுவாக எதிர்க்கிற உணர்வு கொள்வதில்லை.

தாலாட்டு முதல் ஒப்பாரி வரை மண்ணின் இசை தந்து தமிழக மக்களின் இசைத்தேடலை மேற்கத்திய இசையாலும், வக்கிர இசை ஒலிப்புகளாலும் வீழ்த்தப் பார்க்கின்றனர்.

தமிழ்த் திரையுலகம் 8 அடி பாய்ந்தால் தொலைக்காட்சியோ 16 அடி பாய்கிறது. சென்னைத் தொலைக்காட்சி இந்தியை பரப்புகிறது என்று தொலைக்காட்சி பெட்டியை உடைத்த தி.மு.க. பினாமிகளோ, "சன்டிவி" வழி சங்கரப் பார்ப்பானைவிட பல மடங்கு அதிகமாகப் பார்ப்பனச் சேவை செய்கின்றனர். நிம்மதி உங்கள் சாய்ஸ், சூப்பர் காப்ஸ், சூப்பர் குடும்பம், பெப்சி உங்கள் சாய்ஸ் என்று தமிழ்ச் சேவை செய்யும் இவர்களுக்கு நிகழ்ச்சிகளைத் தந்து பயனடைவது பார்ப்பனர்களே. அகன்ற திரையில் இட ஒதுக்கீட்டை எதிர்த்த பார்ப்பன பாலசந்தர் "சின்னத்திரை"யில் எளிதாய் அதையே பெருமளவில் செய்கிறார். "அவாள்" கலாச்சார நாடகங்களே இந்தத் தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படுகின்றன.

பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை கருத்துகள் ஒரு விழுக்காடு கூட இத்தகைய நிகழ்ச்சிகளில் இடம் பெற்றுவிடுதில்லை.

மதச் சார்பற்ற இந்த நாட்டின் தொலைகாட்சி ஒருபுறம் ராமா-கிருஷ்ண - அனுமார் - நமசிவாயா என்று சேவை (!) செய்கின்றது மறுபுறம் சக்திமான், மாயாவி, போன்ற அறிவுக்குப் புறம்பான கருத்துகளைப் பரப்பி மக்களை ஏமாற்றுகிறது. பார்ப்பனிய தூர்தர்ஷனிடம் நாம் வேறு என்ன எதிர்பார்க்கமுடியும்.

திராவிடப் பாசறையிலிருந்து வந்தவர்களோ மாயாவி மார்சன், பஞ்சமி, மூடுபனி போன்ற மாயக்கதைகளைச் சொல்லித் தமிழர்களிடம் பகுத்தறிவுப் (!) பிரச்சாரம் செய்கின்றனர்.

குரங்குகளையும், நாய், குதிரை, யானை ஆகிய விலங்குகளையும் காட்டி சர்க்கஸ் சினிமாக்கள் எடுத்த தி.மு.க உடன்பிறப்பு ர்ராம நாராயணன் இப்போது "மாயா" போன்ற மோடிவித்தை



படிப்பகம்

www.padippakam.com

கதைகளைச் சொல்லி சஷ்டி சாய்பாபா பஜனை நடத்துவது, மாவட்டச் செயலாளரின் பொட்டை அழிக்கச் சொன்ன தானைத் தலைவருக்குத் தெரியாதா என்ன? அல்லது பிரதமர் வாஜ்பாயும் உள்துறை அத்வானியும் சாய்பாபா காலில் விழுந்து மதச்சார்பற்ற தன்மையை நிலைநிறுத்துவதுபோல இவரும் டி. ராஜேந்தர், ராமநாராயணன் போன்றவர்கள் மூலம் இப்போதைக்குப் பாபாக்களின் ஆசி பெற்று வைப்போம் பிறகு கூட்டணிக்கு உதவும் என்று தமது அரசியல் சாணக்கியம் காட்டுகிறாரா?.

இப்படித் தமிழகக் கலையுலகம் கதையை விடுத்து சதையைக் காட்டி, பார்ப்பனப் பண்பாட்டை பரப்புவதற்கும், மாய ஜாலங்களைக் காட்டி மக்களை ஏய்ப்பதிலுமே அயோக்கியத்தனமாய் இயங்குகின்றது. இப்படியான இருட்டிலிருந்து கலையை - மக்கள் கலையை மீட்க வேண்டியது நம் காலக்கடமையாகிறது.

கேட்பவன் கேணையனானால் கேப்பையில் நெய் வடியும் என்று எத்தர்கள் ஏமாற்றுவார்கள். அதுபோல் நாம் கேணையர்கள் அல்லர்; கேடர்களை விரட்டுபவர்கள் என்று உணர்த்த வேண்டும்.

இம்மண்ணின் உண்மைகளை மேடு, பள்ளங்களை நாடகங்களாக பாடல்களாக தமிழகத் தெருக்களில் காட்சியாக்குவோம். நம் மக்களின் இரத்தமும், வியர்வையும் ஆதிக்கர்களால் சுரண்டப்படுவதையும், சாதியால் நம்மைப் பிரித்திருக்கும் ஓநாய்க் கூட்டம் நம் ரத்தம் குடித்து முடிக்கும் முன்பு நாம் இணைந்து கிளர்ந்தெழ வேண்டியதையும் நம் மக்களுக்குக் கலை மூலம் கற்பிப்போம்.

வல்லரசுக்காகவும், இந்தியப் பார்ப்பனியத்திற்காகவும் கலை வணிகம் செய்து உழைக்கும் மக்களைப் பாழாக்கிடும் இக்கலை வணிகர்களை விரட்டியடிப்போம்



**ரத்த அபிஷேகம் செய்த மந்திர வாதி கைது எனில்...**

# 'ஒரே சட்டம்' - என்போர் என்ன சொல்கின்றனர்?

அண்மையில் சென்னை - கொரட்டூரில் அம்மன் சிலை ஒன்றிற்கு ரத்தத்தால் அபிஷேகம் செய்தார் என்பதற்காக 'முனிசாமி' எச்கிற ஏழை மந்திரவாதியைக் கைது செய்திருக்கிறார்கள்.

அப்படியான அபிஷேகம் செய்ததற்காக அந்த மந்திரவாதியைக் கைது செய்தது சரி போலவே, பாலபிஷேகம், நெய் அபிஷேகம், பழ அபிஷேகம் என்று ஏராளமாய்ப் பொருள்களை வீணாக்குகிற பார்ப்பனப் பூசாரிகளை எப்போது யார் கைது செய்வது?.

அஸ்வமேதயாகம் - என்று நூற்றுக்கணக்கான குதிரைகளை வெட்டி வேள்வி நடத்தியதோடு இப்போதும் அப்படி நடத்தச் சொல்லுகிற மனுதர்மசாஸ்திரப் படியான பூணூல் சாஸ்திரிகளுக்கு ஒரு சட்டம், ஏழை முனிசாமிகளுக்கு ஒரு சட்டமா?

உழைக்கும் **மக்கள் தமிழகம்**

**- வளர்ச்சிக்குக் கைகொடுத்த கொடையுள்ளங்கள் -**

| | |
|---|---|
| ★ சொல்லாய்வறிஞர் அருளியார், தஞ்சாவூர் | உரு. 500.00 |
| ★ சித. செல்வராசன், செங்குன்றம் | உரு. 40.00 |
| ★ நெருப்பின்மகன், கோவை | உரு. 1100.00 |



படிப்பகம்

www.padippakam.com

# “பயர்” —எதிர்ப்பு எதைக் காட்டுகிறது?

இன்றைக்கு வாஜ்பேயின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளைப் புறந்தள்ளிவிட்டு மக்கள் கூடுமிடங்களிலெல்லாம், படிக்கும் இதழ்களிலெல்லாம் ‘பயர்’ காட்சியளிக்கிறது. அப்படியென்ன தான் பயரில் இருக்கிறது?

ஒரு வீட்டிற்குச் சென்ற அண்ணன், தம்பி மனைவிகளான ஓரகத்திகள் தங்களது கணவர்களால் பாலியல் உணர்ச்சிகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழல் ஏற்பட, தங்களது உணர்ச்சிகளை இருவரும் பரிமாறிக் கொள்ள அது ஓரினச் சேர்க்கையில் போய் முடிகிறது. இதைக் கண்ட கணவன் கண்டிக்க, அதைப் பொருட்படுத்தாமல் இருபெண்களும் வீட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். இதுதான் கதையாக நமக்கு கிடைத்த விவரங்கள் சொல்கிறது.

இன்றைய சூழலில் ஆணாதிக்க வாதம், பெண் விடுதலை என்பதெல்லாம் ஒருவித மெத்த படித்த அறிவு ஜீவிகளிடம் மட்டுமே பேசபட்டும், எழுதப்பட்டும் வருகிறது. மற்றபடி அது கிராமங்களிலோ, நகர்ப்புற பாட்டாளி வர்க்கத்திடமோ அதுவெல்லாம் என்ன என்பதாகவே இருக்கிறது. ஏனெனில் அவர்கள் பிரச்சினைகளெல்லாம் அடிப்படை வசதிகளை பற்றியும், பொருட்களின் விலையேற்றம் பற்றியும்தான். இந்நிலையில் இதுபோன்ற படங்கள் எதை சாதிக்கப்போகிறது? என்கிற கேள்வி நம் அடிமனத்தில் தோன்றினாலும் இது நடுத்தரவகுப்புக் கருத்தியல் என்கிற அளவிலே



விமர்சிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

தாய்வழிச் சமுதாயத்திடமிருந்து தந்தைவழி சமுதாயம் என்றைக்கு உரிமைகளைப் பறித்துக் கொண்டு ஆளுமைக்கு வந்ததோ அன்றிலிருந்து பெண் அடிமையானாள். கற்காலம் முதல் இன்று ‘இணையம்’ காலம் வரை பெண்ணடிமை என்பது வெவ்வேறு விதங்களில் புதிய புதிய உத்திகளுடன் வெளிப்பட்டு வருகிறது. என்னதான் பெண்ணோடு அருகிலேயமர்ந்து ‘தோழமை’ என்கிற பெயரில் பேசினாலும் “அவளொரு பெண்… நானொரு ஆண்” என்கிற எண்ணமே ஆணிடம் மேலோங்கி நிற்கிறது. அதற்கு அடிப்படையே பாலியல் வழிப்பட்ட சிந்தனை தான்.

இத்தகைய சிந்தனையை மாற்றுவது என்பது முற்போக்கான… சனநாயகப் பூர்வமான… சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதிலேயேதான் அடங்கியிருக்கிறது. அத்தகைய சிந்தனைகளை நமது மக்கள் தொடர்பு சாதனங்கள் உருவாக்காமல் பெண்களை மேன்மேலும் பாலியல் பொருளாகச் சித்திரிப்பதனால் இளைஞர்களிடம் ஒருவித பாலியல் மேலாதிக்க சிந்தனைதான் வளர்ந்து வருகிறது. இதனால்தான் “பாலியல் என்பதே ஆண்களுக்கானதுதான்…. பெண்களுக்கானது அல்ல… என்கிற கருத்து இயல்பாகவே ஆண்களிடம் வந்துவிடுகிறது. படங்களில் அரைகுறை நடனங்கள், பாலியல் பலாத்காரங்கள் போன்ற காட்சிகள் எல்லாம் திரையில் தெரிகிறபோது ஆண்களின் வரிசையில் எந்தக் குரலும் எழாமல் மிக உண்ணிப்பாகப் பார்க்கும் போக்கு நாம் காண நேரிடுகிறது. இப்படிப்பட்ட ஆண் ஆளுமையான பாலியல் உணர்வைத் தோலுரிக்கும் நோக்கோடு வெளிவந்திருக்கும் `பயர்’ எதிர்ப்பு அதில்தான் அடங்கியிருக்கிறது.

இப்படம் வெளியானதால் ஓரினச் சேர்க்கைப் பற்றி அறிந்திராத பெண்கள் இப்படத்தைப் பார்த்தப் பிறகு ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுவிடுவார்களோ… அதனால் ஆணின் பாலியல் சந்தையில் தேவை ஏற்பட்டுவிடுமோ என்கிற அச்சத்தின் வெளிப்பாடுதான் இந்த எதிர்ப்பு. இந்த எதிர்ப்பிற்குத் தலைமைதாங்கும் ‘பால்தாக்ரே’ ஒன்றும் இந்தியப் பண்பாட்டைக் காப்பற்றுபவர் அல்லர். இவர் சொல்லும் இந்தியப் பண்பாட்டை இவரே பலமுறை சிதைத்துள்ளார். அதில் அன்று “மைக்கல் ஜான்சனை” அழைத்து வந்து பம்பாயிலே பாப் இசை நடத்திவர் இவர்தான்!



படிப்பகம்

www.padippakam.com

இந்தியப் பண்பாடு என்பதே ஆணாதிக்கவாதப் பண்பாடகப், இந்துத்துவப் பண்பாடக இருக்கிறது. அதனால்தான் இந்துக் கோயில்களின் சிற்பங்களும், புராணங்களும், இதிகாசங்களும் 'ஆண் நிலைவாத பாலியல்' கருத்துகளை வெளிப்படுத்துவதாகவே இருக்கிறது. வாத்யசனின் 'காமசூத்ரா' கூட பெண்களை எப்படியெல்லாம் புணர வேண்டும் என ஆணிற்கு ஆலோசனை கூறும் பாலியல் நூலாகவே காட்சியளிக்கிறது. , எனவே, இதுவெல்லாம் இந்தியப் பண்பாடு என்கிறப் போர்வையில் ஆணாதிக்கவாதத்தை மறைப்பதே யாகும்.

ஓரினச்சேர்க்கை என்பது ஏதோ பெண்களிடம் மட்டுமே இருப்பது போலவும், ஆண்களிடம் இல்லை என்பதைப் போலவும் "சீதாலட்சுமி" (பெண் இன்ஸ்பெக்டர்) விவாகாரத்திலிருந்து பேசபட்டும், எழுதப்பட்டும் வருகிறது. சாதரணமாகவே இரண்டு பெண்கள் நடந்து சென்றாலுமே `லெஸ்பியன்ஸ்' போவுது பாரு என கிண்டலடிக்கும் இளைஞர்கள்தான், இரண்டு ஆண்கள் நடந்து சென்றால் "ஓமோ செக்ஸ்" போறானுவ பாரு - எனக் கிண்டலடிக்கும் பெண்கள் உண்டா? இல்லை. ஏனெனில் ஆணாதிக்கவாத சமூகத்தின் மீது கொண்ட அச்சம்தான். அத்தகைய அச்சத்தைப் போக்கும் கருத்தியல் படங்கள் வராமல், இதுபோன்ற படங்கள் வருவதனால் மேலும் ஆண்களால் பெண்கள் கொச்சைப்படுத்தப்படவே அது உதவும்.

பாலியலைப் பொருத்தமட்டில் ஆணும், பெண்ணும் கருத்தொருமித்த உணர்வுடன் பகிர்ந்து கொள்வதேயாகும். மற்றபடி இதுபோன்ற ஓரினச் சேர்க்கை ஆண்களிடமோ அல்லது பெண்களிடமோ இருக்குமேயானால் அது தவறான பாலியல் முறையாகும். இயற்கைக்கு மாறானதாகும். அப்படிபட்ட முரணான முறையை ஊக்கப்படுத்துவதாகவே இறுதிகாட்சி அமைகிறது.

சமூக அவலங்கள் எவ்வளவோ இருக்க, அதையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் இதுபோன்ற படங்களை எடுப்பது என்பது அவலங்களை மறைத்து பார்வையாளனை வேறொரு திசையில் அழைத்துச் செல்லவே உதவும்.

**-தமிழ்ச் செவ்வந்தி -**

# செல்லாத ஆணையைப்

வரும் மார்ச்சு 25ஆம் நாள் முதல் நூறு தமிழர்கள் தமிழ்வழிக் கல்விவேண்டியும், தமிழில் படித்தோர்க்கு வேலை வாய்ப்பின் முன்னுரிமை கேட்டும் பட்டினிப் போர் தொடங்க இருக்கின்றனர்.

சொந்த நாட்டில் சொந்த மொழியில் கல்வி இல்லாத அவலமான சூழ்நிலையும், அதற்காக நூறு தமிழ் உணர்வினர் பட்டினிப்போர் நடத்த வேண்டிய தேவையும் இருக்கிற வகையிலேயே தமிழகம் இருக்கிறது.

இப்படி அறிவிக்கப்பட்டபோதும், இது குறித்து எவ்வகையிலும் கவனமில்லாமலேயே இருக்கின்றன அரசுகள். அரசுகளின் இத்தகைய மெத்தனப்போக்கு இதே நிலையில் இருந்திட இயலாது. எப்படி இளைஞர்கள், மாணவர்கள், உழைப்பாளிகளின் எழுச்சிகள் உலக அளவில் பல ஊமை அரசுகளையும் ஆட்டம் காண வைத்ததோ அப்படியே அவ்வரசுகள் இதனால் இறுதியில் ஆட்டங்காணப் போவது உறுதி.

மக்கள் உரிமைக்கானப் போராட்டங்களின் உரிமை என்பது அரசுகளை மட்டுமல்ல அரசமைப்பையே ஆட்டங்காண வைக்கிற திறன் கொண்டது என்கிற நிலையிருக்க, அப்போராட்டத்தைக் கூர்மையாகவும், நேர்மையாகவும் போராட்ட இலக்கின் இறுதி வரைக் கொண்டு செலுத்துவது நம் முன்னுள்ளகடமையாகிறது.

அக்கடமையுணர்வோடேயே இம்முயற்சியை மேற்கொண்டோருக்கு நாம் சிலவற்றைச் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தமிழகத்தில் நடக்கிற தமிழுக்கான உரிமைப் போராட்டங்களும் - ஒவ்வொரு வகைப்பட்டதாகவே இருக்கின்றது.

1938-இன் போராட்டம்-இந்தியை எதிர்த்த அக்காலத் தமிழ் அறிஞர்களின் உரிமைக்குரலாக - நீதிக்கட்சி - சுய மரியாதை இயக்கத் தொடர்புகளோடும் நடந்தது. அது அன்றைய ஆங்கில வல்லரசெதிர்ப்பை இந்தி வழி ஒருங்கிணைத்த இந்தியக் காங்கிரசின் இந்தி வல்லாண்மைப் போக்கை எதிர்த்தது. அதன்வழி எழுந்த தமிழ்த் தேசியக் கருத்தியல் அழுத்தமே பெரியாரைத் தமிழ்நாடு தமிழருக்கே - என்று முழங்கவும் வைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

# பெறுவது போதாது...

1965-இன் போராட்டமும் இந்தியை எதிர்த்ததாகும். அப்போது காங்கிரசு கட்சியின் ஆட்சிவழி இந்தியைத் திணித்த இந்திய அரசின் வெறிப்போக்கை அறிஞர்களும், மாணவர்களும் மிகக்கடுமையாக எதிர்த்துப் போராடினார்கள். உலக அளவில் மொழி உரிமைக்கென நடந்த ஒருசில போராட்டங்களில் அது தலையான வகையில் பங்காற்றியது.

அப்போராட்டங்கள் இந்தியக் கட்டமைப்பின் மொழிவழிப்பட்ட ஆளுமையையே எதிர்மைப்படுத்தின. மேலும் அக்காலங்களில் குறிப்பாக 1938-இல் கல்வி என்பது மிகக்குறைவான அளவிலேயே அரசு வழிப்பட்டதாக இருந்தது. அதுவும் உயர்நிலைக் கல்வி அளவில் மட்டுமே இருந்தது. எனவே அக்காலத்தைய இந்தித்திணிப்பு என்பது உயர்கல்வியாளர் அளவிலும், அலுவல் தொடர்பினரிடையே இருந்ததால், அவர்களிலிருந்தே எதிர்க்கப்பட்டது.

பின்னர் 1965ல் பள்ளிக்கூடங்களில் இந்தியை இன்னொரு மொழிப்பாடமாகப் படித்திட வேண்டுமென இந்திய அரசின் திணிப்பு முயற்சி நடக்கவும் - அதை எதிர்த்து மாணவர்களும் - அறிஞர்களும், திராவிட முன்னேற்றக் கழக அரசியலாளர்களும் களத்தில் இறங்கினர்.

(அ) இவ்விரு காலங்களிலும் கல்வி என்பது இந்திய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருந்திடவில்லை.

அதன்பின்னர் நெருக்கடிநிலைக் காலத்தில் (1977-வாக்கிலேயே) மாநில உரிமைகள் பலவகையில் பறிக்கப்பட்டும்-முடக்கப்பட்டும் இந்திய ஆட்சித்துறையின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குச் சென்றது போல்,கல்வித்துறையும் இந்திய அரசால் பறிக்கப்பட்டு பொதுத்துறைக்குச் சென்றது.

(ஆ) மேலும் 1938-இன் இந்தி எதிர்ப்பு எழுச்சியானாலும், 1965இன் எழுச்சியானாலும் இவை இரண்டும் ஆங்கிலத்தை அரவணைத்துக் கொண்டனவே.

1938-போராட்டத்தின் முன்னோடிகளாய் இருந்த மறைமலையடிகள் ஆனாலும் சரி, பெரியார் ஆனாலும் சரி இருவரும் ஆங்கில மொழியும் தமிழரிடையே பழகுமொழியாய் வளர்வதில் மறுப்புக் கருத்துடையவர்கள் அல்லர். ஆங்கிலத்தின் பழக்கத்தை அவர்கள் வரவேற்றார்கள்.

1965-போராட்டமும் 'ஆங்கிலமே பெரிதும் வேண்டும் இந்தி வேண்டவே வேண்டாம்' (English Ever, Hindi Never) என்கிற பெரியாரிய கருத்தை அடியொற்றிய முழக்க அடிப்படையிலேயே இருந்தது.

(இ) கணிப்பொறி கல்வி, தொழில்நுட்பக் கல்வி, பிறவகைத் துறை அறிவுக்கான கல்வி யாவும் விரிந்து வளராத அக்காலத்திலேயே அன்றைய இயக்கங்கள் ஆங்கிலத்தை விரும்பி ஏற்றுக்கொண்டன.

இப்போதோ - இத்தகைய கல்விகள் அனைத்தும் ஆங்கில வழி என்பதாகவே இருப்பது மட்டுமல்ல-ஆங்கில வழியில் அல்லாமல் இவற்றைப் படித்திட இயலாது என்பதான

## தமிழ்வழிக் கல்வி வேண்டி சிறைக்குள்ளும் பட்டினிப்போர்

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்வி நிலையங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் இருக்க வேண்டும்.
- உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் வரும் கல்வியாண்டிலேயே தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.
- தமிழக அரசுத்துறை. அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிப் பயின்றவர்க்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

- என்கிற மூன்று அடிப்படைக் கோரிக்கைகளோடு எதிர்வரும் மேழம் 12 (25.4.99) முதல் சாகும்வரை உண்ணாநிலையில் இருக்கவுள்ள நூறு தமிழறிஞர்களை ஆதரித்து 23.3.99 அன்று தமிழகமெங்கும் தமிழுணர்வாளர்கள் ஒருநாள் உண்ணாநிலையில் இருந்தனர்.

இப்போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பாளையங்கோட்டை நடுவண் சிறையில் உள்ள தமிழ் முகிலன். சமுத்திரப்பாண்டி. பொ. ஞானவேல். சென்னை முனியாண்டி. க. ஆனந்தன் ஆகியோர் 23.3.99 அன்று ஒருநாள் முழுவதும் உண்ணாநிலையில் இருந்தனர். இவ்வுண்ணா நிலைப்போருக்கு திரு. சமுத்திரப் பாண்டி தலைமையேற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

பொய்ம்மைக் கருத்தும் பரவலாகப் பரப்பப்பட்டிருக்கிறது.

ஆங்கில வழிக்கல்வி நடைமுறையைப் புறக்கணித்து நம் தமிழ்மொழிக்கல்விக்கான திட்டங்கள் என்பதைக் தொடக்கத்தில் முனைப்பாக எடுத்து செய்த தமிழக அரசுகள்-பின்னாளில் அதை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் வழியான கல்லூரி - பிற மேல்நிலைக்கல்விக்கான தமிழ்வழிப்பாடங்கள் அச்சீட்டுப்பணி முன்னர் முனைப்பாக நடைபெற்ற அளவில் சிறு விழுக்காட்டு அளவில்கூட இப்போது நடைபெறவில்லை.

அப்படி நடைமுறைப்படுத்தாதற்கான அடிப்படைக் காரணம் கல்வி பொதுப்பட்டியலுக்குச் சென்றதும், இந்திய அரசுடனான நேரடித் தொடர்பில் பல பள்ளிகள் இங்கு தொடங்கப் பெற்றதுமே ஆகும்.

இந்திய அரசின் தொடர்பில் தொடங்கப்பெற்ற பள்ளிகளுக்கான நூல்கள் யாவும் ஆங்கிலத்தில் இருப்பதோடு அவை அச்சிடப்பட்டு வருகிற இடங்கள் பெரும்பான்மை தில்லியிலிருந்தும் மும்பையிலிருந்து மாகவே இருக்கின்றன

இந்திய அரசு அப்பள்ளிகளில் நடத்தப்பெறும் கல்விப் பாடத்திட்டத்தை எவ்வாறு பார்ப்பனியத் தன்மையோடு அமைப்பது என்பதில் கவனம் செலுத்தியதோ அதையே மாநில அரசுகளும் பின்பற்றிட வேண்டுமாய் ஆணை போடவே-அதன் அடியொற்றியே தமிழகக் கல்வி முறையும் இயங்குகின்றது.

இப்போக்கால் பல்கலைக்கழகம் அமைப்பது முதல், மருத்துவக்கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் என்று மட்டுமல்லாமல் மேல்நிலைப் பள்ளிக்கூடங்களும் அதை அடியொற்றிய தொடக்க, மழலையர் பள்ளிகளும் இந்திய அரசின் நடுவண் பாடத்திட்டத்தை அடியொற்றியே அமைந்திருக்கிறது.

அப்படி அமையக்கூடாது கல்வி என்பது தமிழக அரசின் பாட வகுப்பாட்டிலேயும், தமிழக அரசின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டுமே இயங்க் வேண்டும் எனத் தமிழக அரசு முன்மொழிகிற முயற்சியில் கவனம் செலுத்தவில்லை.

ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகள் ஒவ்வொன்றாகத் தம் உரிமைகளை இந்திய அரசுக்கு விற்றுக்கொண்டு வந்தனவே அல்லாம மொழி காக்கவோ, இனம்-நாட்டுரிமை காக்க போராட முன்வரவில்லை.

பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பைப் பேசி வ திராவிடக் கட்சிகள் கல்வித்துறையில் சிறிது பொறுப்பில்லாமல் இருந்ததே இத்தமிழி கல்விக்கான எழுச்சியின்மைக்கான அடிப்படை காரணமாகும்.

ஆனால், அதேபோது இந்தியப் பார்ப்பனிய கல்வியில் தம் ஆளுமையைத் தக்கவைத்து கொள்ளவும், அறிவியல் வளர வளர த பிற்போக்குக் கருத்தியல்களையும் - த ஆளுமையையும் கல்வி வழியே நிலைப்படுத்தி கொள்வதிலும் சிறிதும் சோர்ந்துவிடவில்லை.

புராணங்களையும், பொய்ம்மைகளையு வரலாறு என்று புனைவதும் உண்மை வரலாற்றைக் கட்டுக்கதை என்று திரிப்பதுமே அவர்களின் சாணக்கியத் தனமாகி விட்டது.

> *கல்வித்துறையை இந்திய அரசிடமிருந்து மீட்பதும், தமிழக அளவில் தமிழ்வழிக்கல்விக்கும், தமிழ்வழிப் படித்தோர்க்கு வேலைவாய்ப்பின் முன்னுரிமை என்பதுமேதான் தம் இலக்கை வெற்றியடைய செய்யும்.*

இதற்குத் தாளம் தட்டுகிற வகையிலே தமிழகக் கட்சிகளும் இயங்குகின்றன.

இந்தியாவால் பறிக்கப்பட்ட தமிழகத்தி உரிமைகளை மீட்டுப்பெறுவதற்கு பதிலா இருக்கின்ற உரிமைகளையும் இழந்துவிடுகி கோழைகளும், மோழைகளுமே ஆட்சி கட்டிலேறிக் கொள்ளையடிப்பதிலே குறியா இருக்கின்றனர்.

தமிழர்களாகவும், திராவிடர்களாகவும் வீரம் பேசியவர்கள் எல்லாம் தில்லி பாராளுமன்றத்தின் கட்டிலேறி இந்தி ஒற்றுமையையும், இந்தியப் பார்ப்பனியத்தையு தாங்கவே செய்ததால், தமிழ்வழி கல்வியை பற்றியோ, தமிழர்க்கான கல்வித் திட்டத்தை பற்றியோ கவலையற்றவர்களாகவே இருந்தனர்.

இந்த நிலையில் தமிழ்வழிக்கல்விக்கான கோரிக்கையும், தமிழ்வழிப்படித்தோர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கி முழக்கமும் - அடிப்படையில் தமிழ்த்தேசிய நலன் கருதியதும், தமிழர் தம் வாழ்வியல் உரிமைக்கே அடிப்படையானதும் ஆகும்.

*1965* - இலேயே இத்தகைய கருத்தைத்



படிப்பகம்

www.padippakam.com

நன்மொழி' - வலியுறுத்தி எழுதியதையும், 1990 இலேயே **'தமிழில் படித்தோர்க்கே வேலையாய்ப்பில் முன்னுரிமை'** என்று **தமிழ்நாடு இளைஞர்பேரவை** திருநெல்வேலியில் மாநாடு நடத்தியதையும் அம்முழக்கத்தின் முந்தைய அடிப்படை நிகழ்வாகக் கொள்ளலாம்.

அந்த முழக்கத்திற்கும், அம்முழக்கத்தை காட்டிய நிகழ்வுகளுக்கும் நீண்டகால வரலாறு இருந்தாலும் அம்முழக்கத்தை முனைப்பாய் முன்னெடுத்துப் போராட்டத் திட்டத்தோடு இணைத்திருக்கிற சிறப்பு தமிழ்ச்சான்றோர் பேரவையுடைதே.

அப்போராட்டச் செயல்பாட்டை நாம் வரவேற்கிற அதே போது, அப்போராட்டம் யார் யாரை எதிர்த்தது - எப்படி அது நிறைவுறும் என்பதில் இன்னும் கூடுதலான அக்கறையும், பொறுப்புணர்ச்சியுடனான சிந்தனையும் தேவை என்பதையும் சொல்லக் கடமைப்பட்டுளோம்.

இங்கு இருகிற கல்வி அமைப்புக்குள் இருக்கிற உரிமை அளவில் தமிழ்வழிக்கல்விக்குப் போராடுவது ஒரு புறம் இருக்க, நம்மிடம் இல்லாத கல்வித் தொடர்புடைய அடிப்படை உரிமையை இந்திய அரசிடமிருந்து மீட்டெக்க வேண்டுவதும் அடிப்படை நோக்கமாதல் வேண்டும்.

*"கல்வித்துறையில் புரட்சிகரமான மாறுவதல்களைக் கொண்டுவர தமிழகச் சட்டப்பேரவைக்கு முழு அதிகாரமில்லை* (தமிழ்த்தேசத் தன்னுரிமைத் தீர்மானங்கள் - த.தே.பொ.க.வெளியீடு) என்று ஏற்றிருக்கிற பொழுது அவ்வதிகாரம் இந்திய அரசிடமே குவிந்திருக்கிறது என்று தெளிவாகிற பொழுது-அதை எதிர்த்துப் போராடவும், அப்போராட்டத்தின் வழி நம் உரிமையை மீட்கவுமான நிலையிலேயே தமிழ்வழிக்கல்வியையும் நிறைவு செய்யமுடியும் என்பதில் தெளிவாதல் வேண்டும்.

உரிமைகொண்ட ஓர் அரசமைப்புள்ள தேசத்தில்தான்-அத்தேசத்தின் மொழி, கல்வி மொழியாகவும், அலுவல் மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் ஆக முடியும்.

அப்படியாக ஆக முடியும் என்பதோடு - அப்போதுதான் கல்வித்துறையிலான பாடத் திட்டங்களை, இத்தமிழ்த் தேசிய வரலாற்றை, பண்பாட்டை, வாழ்வியலை, அறிவியலை ஒட்டியதாக அமைக்கவும் முடியும்.

அதுவல்லாமல் - மொழிவழியில் - கல்விவழியில் நம்தேசத்திற்கான அதிகாரங்கள் இந்திய அரசிடம் கிடக்க - நாம் இங்கு தமிழ்வழிக் கல்வியை அனைத்து நிலைகளிலும் கொண்டு வரத் தமிழக அரசை மட்டுமே எதிர்மைப்படுத்திப் போராடுவது இந்திய அரசுக்கும் இந்தியப் பார்ப்பனியத்துக்குமே ஊக்கமாகப்போகும்.

நம்முடைய கல்வி உரிமைக்கோரிக்கையை தமிழக அரசு அளவிலேயே எதிர்மைப்படுத்திப் போராடுகிறபோது, பிறகட்சிகள் குறிப்பாக இந்தியப் பார்ப்பனிய பாரதீய ஜனதாக்கட்சியுட்பட நம்மோடு சேர்ந்துகொண்டு இந்தியப் பார்ப்பனியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே செய்யும்.

தமிழ்வழிக்கல்விக்கான ஒரு நாள் அடையாள உண்ணாநோன்புக் போராட்டத்தில் பங்கேற்க சென்னையில் பூணூலாய் இல.கணேசன் உள்நுழைந்ததற்கான காரணமே இதன் அடிப்படையிலேயே ஆகும்.

மற்றபடி *'தமிழ்நாட்டில் கட்சியை வளர்க்க தமிழக மொழிச்சூழலை அனுசரித்துப்போக வேண்டும்* என்றோ, *'தமிழ்வழிக்குரல் கொடுக்க வேண்டிய அளவிற்கு நிலைமை மாறிவருகிறது* என்றோ பா.ஜ.க.போன்ற இந்தியப் பார்ப் பனியத்தின் அணுகுமுறையை கண்டு வியப்படை வோமானால் நாம் ஏமாற்றப் படுவோம்.

இந்நிலைகளை உணர்ந்து,

நம்முடைய போராட்டத்திற்கான எதிர்மையாளர்கள் இந்திய அரசும் அதன் அடிவருடும் தமிழக அரசுமே ஆகும் எனத் தெளிவடைவோம்.

அவ்வகையில், கல்வித்துறையை இந்திய அரசிடமிருந்து மீட்பதும், தமிழக அளவில் தமிழ்வழிக்கல்விக்கும், தமிழ்வழிப்படித்தோர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்பதுமேதான் நம் இலக்கை வெற்றியடைய செய்யும்.

தமிழறிஞர்களும், தமிழார்வலர்களும் சிந்தித்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

● தமிழ்வழிக் கல்விக்காக 100 பேர் சாகும்வரை பட்டினிப்போரை ஆதரித்து கடந்த ஏப்-10 அன்று ஈரோட்டில் மிதிவண்டி ஊர்வலம் நடைபெற்றது. பல்வேறு தமிழ் அமைப்புகள் பங்கேற்ற இவ்வூர்வலத்தில் த.ஒ.வி.இ., தாகம் அமைப்புத் தோழர்களும் பங்கேற்றனர். தோழர் இளங்கோவன் (த.ஒ.வி.இ) அவர்களும் புலவர் வடிவேலனார் அவர்களும் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# பீகார் – நடந்ததும், நடக்க வேண்டியதும்....

துப்பாக்கி வெடிப்பொலி கேட்டு அரண்டு புரண்டு எழுந்தவர்களால் செத்துக்கிடந்தவர்களைக் காட்டி அழமுடிந்ததே தவிர வேறு ஏதும் செய்யமுடியவில்லை.

நாள்முழுதும் உழைத்த உழைப்புக்கான உணவைக்கூட நிறைவாய்ச் சாப்பிடாமல் மயங்கித் தூங்கிக்கொண்டிருந்த ஏழைத் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைத்தாம் அந்த வெறிக்கூட்டங்கள் நெஞ்சில் சிறிதும் ஈரமில்லாமல் சுட்டுக் கொன்றன.

தஞ்சை மாவட்டங்களில் பண்ணை வேலைக்கு நேரம் தவறி வந்ததற்காகவோ அல்லது பண்ணைக் குடும்பத்தினரை எதிர்த்துப்பேசியதற்காகவோ கட்டி வைத்து சவுக்கடி கொடுப்பது, சாணிப்பால் கரசி குடிக்கவைப்பதுபோன்று, திட்டமிட்டு ஒருகுறிப்பிட்ட நபரை மட்டும் அல்லாமல், பீகாரில் கொத்துக் கொத்தாகப் பெண்கள், குழந்தைகள், முதியோர் என்றில்லாமல் அனைவரையும் சுட்டுத்தள்ளியது அந்த பண்ணையாரின் வெறிப்படை!



**எதற்காக?**

இவ்வாறு காட்டுத்தனமாக அந்தப் பண்ணையார் படையினர் வெறியாட்டம் ஆடுவதற்கானக் காரணங்கள் முழுமையாய் ஆய்வுக்குரியன.

பீகாரில் உள்ள பல்வேறு நிலவுடைமைச் சாதிப்பண்ணை ஆண்டைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலத்திலும் இயக்கங்கள் கட்டித் தங்களின் ஆதிக்கங்களை நிலைநிறுத்தி வந்திருக்கின்றனர்.

***கிசான் சுரக்க சமதி, பூமிசேனா, பிரம்மரி சேனா, எவாரிக் சேனா, கும்வர் சேனா, கங்க சேனா, கதிரவன் சேனை, உழவர் சங்கம், கவர்ன விடுதலை முன்னணி, ரன்பீர் சேனா*** போன்றவை முகாமையான இயக்கங்கள்.

இந்த இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டத்தில் சொல்வாக்கு பெற்றது என்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு சாதியளவிலும் செல்வாக்குப் பெற்றது.

குர்மி, யாதவர், இராஜபுத்திரர், பதர், பூமிகார் - என்பதான நிலவுடைமைச் சாதிகளின் அடிப்படையிலேயே இந்த இயக்கங்கள் கட்டப்பட் டுள்ளன.

1979 - ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டிருக்கிற இந்தப் பல்வேறு இயக்கங்கள் பலவற்றுள் அண்மைக் காலமாகக் கட்டப்பட்டிருக்கிற இயக்கங்கள் தனக்குள் திட்டமிட்டுப் பெரும்படை கட்டி மக்களைக் கொத்துக்கொத்தாகக் கொலை செய்வதையும் நோக்கமாகக் கொண்டவை.

1994-இல் தொடங்கப்பட்ட ரன்பீர் சேனா முழுக்க முழுக்கத் தானே ஓர் அரசு போலவே இயங்கி வருகிறது. அவ்வியக்கம் கட்டப்பட்டதிலிருந்து இன்றுவரை இருநூறுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கொலை செய்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமே எதிரிகளாக எண்ணுகிற வகையில் செயல்படுகிற அந்த ரன்பீர் சேனாவினர் முழுக்க 'பூமிகார்' என்கிற சாதியைச் சேர்ந்தவர்கள்.

பீகாரின் வடமேற்குப் பகுதியில் உள்ள பீச்பூர் பாட்னா, செகனாபாத் ஆகிய மாவட்டங்களில் பரவி இருக்கிற பூமிகார் மக்களின் பெரும் செல்வாக்கைப் பெற்றது இந்த 'ரன்பீர் சேனா'.

சாதிய செல்வாக்கில் வெறிகொண்டு அலையும் அந்த ரன்பீர் சேனா தாழ்த்தப்பட்ட மக்களை எதிரிகளாக எண்ணிச் சுட்டுக் கொல்வதற்கான காரணங்கள் முக்கியமானவை.

தமிழகம் போலவே பீகாரிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலமற்றவர்களாக இருப்பினும், தமிழகத்தைக் காட்டிலும் கல்வியறிவு என்பது மிகமிகமிகக் குறைவு.

எனவே, அரசு வேலைவாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் நுழைவு மிகவும் குறைந்த விழுக்காடே உள்ளது.

அதன் காரணமாக அரசக்கட்டமைப்பு முழுமையும் மனித உரிமைக்கு முற்றிலும்



படிப்பகம்

www.padippakam.com

புறம்பானதாகவும், ஆதிக்கச் சாதிவெறித் தாண்டவங்களைக் கண்டு கொள்ளாமலுமே இருக்கின்றது.

## ரண்பீர் சேனாவும், அரசியல் பின்னணியும்

பிரமேசுவர் சிங் – என்று தலைமறைவாக இருக்கிற 'பூமிகார்' சாதியைச் சார்ந்த ஆதிக்கச் சாதிவெறியனின் தலைமையிலேயே ரண்பீர் சேனா 1995 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

1994 - ஆம் ஆண்டு பூமிகார் நிலவுடைமைச் சாதிவெறியன் ஒருவனைக்கொன்று அவனிடமிருந்து பறிக்கப்பட்ட நிலத்தை மக்களுக்குப் பகிர்ந்தளித்தனர் நக்சல் இயக்கத்தினர்.

அதனையொட்டிக் கட்டப்பட்ட ரண்பீர் சேனாவில் ஏராளமான பூமிகார் இளைஞர்கள் இணைக்கப்பட்டனர்.

மாதம் 1500 உருவா முதல் 2000 வரை மாதச்செலவுக்கென அளிக்கப்படுகிற ரண்பீர் சேனா படை உறுப்பினன் ஒருவன் இறந்தாலும் அவன் குடும்பத்துக்கு 5 இலட்சம் ரூபாயை அந்தப்படை தருகிறது.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்திய அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ரண்பீர் சேனாவுக்குச் சட்டஅளவிலான முழுப் பாதுகாப்பையுமே அளித்து வந்துள்ளனர்.

பீகார் போலிசுத் துறையும் ரண்பீர் சேனாவுக்கு முழுபக்க பலமாகவும், துணையாகவும் இருந்து நக்சல்களை ஒழிப்பதற்கான திட்டத்திலேயே இருக்கிறது.

பீகாரில் இருக்கிற ஐநாறுக்கும் மேற்பட்ட இரகசிய துப்பாக்கித் தொழிற்சாலைகளும் அப்படைகளுக்குத் தீனிபோட்டுக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய வலுவைவிடக் கூடுதலாக பூமிகார் சாதிய மக்களின் முழுச்செல்வாக்கையும் சாதி வழியாகவும், வர்க்க வழியாகவும், அரசியல் சாய்கால் வழியாகவும் பிற ஆளுமைத் தன்மையிலும் பெற்றிருக்கிறது ரண்பீர் சேனா

> *"எவர் பிரதமராக வந்தாலும் அவரை நத்திக்கொண்டு அமைச்சராக்கி வீராவேசம் பேசுகிற ராம் விலாஸ் பஸ்வான்களும், பொருளாதார விடுதலை என்ன என்றே சிந்திக்கத் தெரியாத கன்சிராம்களும்; லோகியாவின் பெயரையும் சமூகநீதி என்கிற முகமூடியையும் கவர்ச்சியாக அணிந்து கொண்டு யாதவரும் இஸ்லாமியரும் 30% - பேர் இருக்கிற எண்ணிக்கை பலத்தையே நம்பி பீகாரையும், உத்திரப் பிரதேசத்தையும் நாசப்படுத்திவிட்ட லாலு பிரசாத் யாதவ், முலாய்ம் சிங் யாதவ் என்கிற பச்சைப் பதவி வேட்டைக்காரர்களும், லோகியா சமதர்மப் போக்கைப் போர்த்திக் கொண்ட ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், நிதிஷ் குமார் போன்ற அரசியல் சூதாடிகளும் – ஒன்று சேரவேண்டிய ஆதி திராவிடரையும், பிற்படுத்தப்பட்டோரையும், பிரித்துப் பிரித்து வைத்துச் சூதாட்டம் ஆடுகிற வரையில் ஒடுக்கப் பட்டோருக்கு எந்த விடுதலையும் வராது"*
>
> **- வே. ஆனைமுத்து**
>
> **(சிந்தனையாளன் – மார்ச்சு – 99)**

> ஆண்டையின் படை அமைப்பு பற்றி, அவர்களின் அரசியல் பின்னணி பற்றி, இச்சமூக அமைப்பு பற்றிய எவ்வகை அடித்தளத் தெளிவுமில்லாமல் சீனப்பாணியை அப்படியே இங்கு 'இறக்குமதி' செய்கிற இப்புரட்சிகர கட்சிகளின் செயல்களை நாம் குருட்டுத் தனமானது என்றே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

அத்தோடு இல்லாமல் ரன்பீர் சேனாவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவே தாழ்த்தப்பட்டோர் அல்லாதபிற சாதியினரின் சார்பில் கட்டப்பட்ட சேனாக்களும் உதவி செய்து வருகின்றன.

## தாழ்த்தப்பட்டோரின் நிலை

எனவே இங்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் தனிமைப்பட்டு போகின்றனர்.

சமூகக் கல்விக்கோ, பிற சமூகவழி எழுச்சிக்கான எத்தகைய அடித்தளமும் இல்லாமல் நாளும் நசிந்து போகிற நிலையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் சூழல் அங்கிருக்கிறது.

இத்தகைய நிலையில் பீகாரில் இருக்கிற மார்க்சிய லெனினியக் கட்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதாரவான நிலையில் குரல் எழுப்பியதோடு ஆண்டைகளின் நிலங்களைப் பறித்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பகிர்கிற நடைமுறையை மேற்கொண்டது.

## தாழ்த்தப்பட்டோர் எதிரிகளா?

வல்லரசிய ஆளுமைக்கெதிராகவும், நிலவுடைமைக்கெதிராகவும் சீனப்புரட்சி



படிப்பகம்

www.padippakam.com

மேற்கொண்ட 'மக்கள் போர்ப்பாதை'யை அப்படியே இங்கு நடைமுறைப்படுத்துகிற நோக்கில் **'வசந்தத்தின் இடிமுழக்கமாய்'** தொடக்கப் பெற்றதே நக்சல்பாரிய எழுச்சி.

நிலவுடைமை ஆண்டைகளை அழித்தொழிப்பதும் அவர்களின் நிலத்தை நிலக்கூலிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதன்வழி அந்தப்பகுதியை நிலவுடைமை ஆண்டையிடமிருந்து விடுதலை செய்வதான நடைமுறையையே அந்த நக்சல்பாரிய இயக்கம் மேற்கொண்டது.

இச் செயல்பாடுகள் தொடக்கத்திலேயே பலவகையில் தோல்வியைத் தழுவின.

இருப்பினும் பொதுவுடைமைத் தத்துவத்தின் மீதிருக்கிற உறுதிப்பாடு என்கிற காட்டலில் தாங்கள் மேற்கொண்ட ஒரு தவறான நடைமுறையின்மீது கொண்டிருக்கிற ஒரு வறட்டுத்தனமான விடாப்பிடியிலேயே தொடர்ந்து பல்வகை இழப்புகளை அடைந்திருக்கின்றன இந்தக் கட்சிகள்.

அடிப்படையில் இங்குள்ள நிலவுடைமைத் தன்மையின் அமைப்பை இந்த நக்சல்பாரிய அமைப்புகள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை.

நிலவுடைமையாளனை அழித்து ஒழித்து அவனின் நிலத்தை நிலக்கூலிகளிடம் பகிர்ந்தளிப்பது என்கிற நடைமுறையில் நிலவுடைமையாளன் எந்தச் சாதியைச் சார்ந்தவனோ அந்த சாதி மக்களில் உள்ள நிலக்கூலிகள், பகிர்ந்தளிக்கப்படுகிற அந்த நிலத்தைப் பெறுவதற்கு முன்வருவதில்லை. மாறாக தன் சாதியைச் சார்ந்த அந்த நிலவுடைமையாளனுக்காக இவர்களும் அந்நிலவுடைமைச் சாதிய ஆண்டைகளோடு ஒன்றிணையவே செய்தனர்.

இந்த நிலையில் இதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் பரிக்கப்பட்ட நிலங்களை அச்சாதியைச் சாராத தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த நிலக்கூலிகளுக்கே பகிர்ந்தளித்தனர் இந்த நக்சலியர்கள்.

பகிர்ந்தளித்துப் பெற்ற நிலங்களைப் பாதுகாக்க முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லல்படுகிற போது அவர்களைக் காப்பாற்றுவதாகக் கருவியேந்திய நக்சலியப்படைக் குழுவினர் உறுதி கூறினர்.

இதைக் கண்ட நிலவுடைமைச் சாதியினர் தாங்களும் தங்கள் சாதியினரின் செல்வாக்கில் படைகட்டித் தாக்குதல் செய்யத் தொடங்கினர்.

ஆனால், இந்த ஆண்டைகளின் படையால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களாகவே இருந்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் நக்சலியக் குழுவினருக்குக் கேடயமாக்கப் படுகிறபோது – அம்மக்களே பாதிப்புகளுக்குப் பெருமளவில் ஆட்படுகின்றனர்.

### பீகாரின் இன்றைய நிலை

இந்த அடிப்படையிலேயே இன்றைக்குப் பீகாரில் உள்ள இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மார்க்சிய லெனினிய நக்சலியர்களின் அணிதிரட்டலில் தாழ்த்தப்பட்ட மக்களும், ரண்பீர் சேனாவின் அணிதிரட்டலில் பூமிகார் மக்களும் அணிதிரண்டு நிற்கின்றனர்.

> இந்திய அரசக் கட்டமைப்பை, அதாவது இந்துத்துவ சாதிய, பார்ப்பனியக் கட்டமைப்பைத் தனிமைப்படுத்தி அதற்கெதிராகப் பெருவாரியான மக்களை அணிசேர்க்காமல் போவதால் அடுத்த அடிகளைக்கூட எடுத்து வைக்க முடியாமல் அடக்கப்படுகிற நிலைக்கே தள்ளிவிடும்.

மிக மேலோட்டமாகப் பார்ப்பதற்கு இது ஒருவகையில் சரிபோன்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமை எழுச்சிக்கு இதுவே வழிபோன்றும் தோன்றினாலும் இது மிகமோசமான பின்விளைவைத் தருகிற ஒரு குருட்டுத்தனமான நடைமுறையே ஆகும்.

ஆண்டையின் படை அமைப்பு பற்றி, அவர்களின் அரசியல் பின்னணி பற்றி, இச்சமூக அமைப்பு பற்றிய எவ்வகை அடித்தளத் தெளிவுமில்லாமல் சீனப்பாணியை அப்படியே இங்கு 'இறக்குமதி' செய்கிற இப்புரட்சிகர கட்சிகளின் செயல்களை நாம் குருட்டுத் தனமானது என்றே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

### நக்சல்களின் அணுகுமுறை

இச்சூழலில் நிலவுடைமையும் பரந்துபட்ட மக்களுக்கும் உள்ள முரண்பாடே முதன்மை முரண்பாடு என்கிற சூத்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே நக்சலிய அமைப்புகள் நிலவுடைமையர்களை அழித்து நிலத்தைப் பகிர்வதின் வழித் தளங்களை விடுதலை செய்வதாய் இலவு காத்திருக்கின்றன.

நிலவுடைமைச் சமூகத்தின் பொருளியல் பின்னணி குறித்தோ, அதற்கும் அரசுக்கும் –



படிப்பகம்

www.padippakam.com



வல்லரசுக்குமான உறவு குறித்தோ அவை மீளாய்வுசெய்து கொள்வதில்லை.

நிலவுடைமையாளரை எதிர்த்து அழிக்கையில்சாதி, உழைக்கும் மக்களைக் கூறுபடுத்தி சாதி மோதல்களை உருவாக்குகிறது என்று பட்டவர்த்தனமாகத் தெரிந்தபின் இவர்கள் சாதி மோதல்களைச் செய்வதையே வர்க்க எதிர்ப்பு நிகழ்வுகளாக எண்ணிச் செய்கின்றனர்.

நிலவுடைமையாளனுக்கும், அரசுக்கும், வல்லரசுக்குமான உறவு அரசியல் அளவில் அரசையும் வல்லரசியத்தையும் தரகு முதலாளியத்தையும் வாழ்விப்பதற்கானதாகவே அல்லவா இருக்கிறது.

எனவே இங்கு வல்லரசியத்தையும், தரகு முதலாளியத்தையும் அது நுழைய வழி ஏற்படுத்துவதன் வழியும், அரசியல்வழி ஆளுமை செய்து கொண்டும் இருக்கிற இந்திய அரசக் கட்டமைப்பை எதிர்த்திடாமல் அதை உடைத்தெறிந்து உழைக்கும் மக்களாட்சி அதிகாரத்தை நிறுவுவது அல்லவாமுதன்மைப்பணி.

அப்போராட்டத்தினூடே அல்லவா ஆதிக்கச் சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி நாம் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது.

எனவே, இப்போராட்டங்களுக்கு ஒடுக்கப்பட்ட சாதியர் அனைவரையும் பரந்துபட்ட நிலையில் அணிசேர்க்காமல் விடுவது மக்களுக்கு இடையிலான மோதலை அல்லவா தூண்டிவிடுகிறபடிச் செய்துவிடும்.

அதைத்தான் இன்றைக்குப் பீகார் அரசுகளும், அதிகார வகுப்பினரும் செய்து வருகின்றனர்.

இந்திய அரசக்கட்டமைப்பை எதிர்த்துப் போராடுவதற்கு, இந்துத்துவ – பார்ப்பனியக் கருத்தியல்களை வேரோடு அழிப்பதற்கு, வல்லரசிய சுரண்டல் களத்தை முற்றாக ஒழிப்பதற்கு, ஆதிக்கச் சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி ஒழிப்பதற்குத் தாழ்த்தப்பட்டோர் விடுதலை வரைக்குமான எல்லையில் அனைத்து உழைக்கும் மக்களையும் அணிசேர்க்காமல் போவதே இன்றைக்குத் தாழ்த்தப்பட்டோர் தனிமைப்பட்டுப் போவதற்கான அடிப்படைக் காரணமாகி விடுகிறது.

கல்வி அறிவு கிடைக்காமல், பொருளாதார நிலையில் அன்றாடம் கஞ்சிக்கே வழியில்லாமல், சமூகம் அதன் மாற்றம் பற்றிய எந்தத்தெளிவுமில்லாத ஏழை அப்பாவித் தாழ்த்தப்பட்ட மக்களை இத்தகைய தவறான நடைமுறையால் செங்கொடி நீட்டிச் சுற்றி வளைத்துத் தன் கட்சியின் செல்வாக்கைச் செழுமைப்படுத்திக் காட்டிக் கொள்வதெல்லாம் எதிரிக்குதான் பயன்படக்கூடியவை.

இந்திய அரசக் கட்டமைப்பை, அதாவது இந்துத்துவ சாதிய, பார்ப்பனியக் கட்டமைப்பைத் தனிமைப்படுத்தி அதற்கெதிராகப் பெருவாரியான மக்களை அணிசேர்க்காமல் போவதால் அடுத்த அடிகளைக்கூட எடுத்து வைக்க முடியாமல் அடக்கப்படுகிற நிலைக்கே தள்ளிவிடும்.

தாமே இந்தியத்தை ஏற்பதன் வழிஇந்தியப் பார்ப்பனியப் போர்வையைப் போர்த்திக் கொண்டு புரட்சி செய்யப்போவதாய் அப்பாவித் தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் பின்னால் சேர்த்தழைத்துக் கொண்டு எவ்வளவு கூர்மைப்பட்ட நடைமுறைத் தந்திரத்தோடு இவர்கள் இயங்கினாலும் இவர்களின் சமூக அரசியல் தெளிவின்மையால் இவர்களின் நடைமுறை குருட்டுத்தனமானதாகவே அமையும். தாழ்த்தப்பட்ட மக்களை இத்தகைய சாக்குழிக்குள் தள்ளவே செய்யும்.

பீகாரிய சமூக அரசியல் பொருளியல் சூழலிலிருந்தான, வல்லரசிய, இந்தியப் பார்ப்பனியப் பூணூல் அணியாத அரசியலை நடைமுறையை மேற்கொள்வதே பீகாரிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலைப்பாதையை அமைக்கும்.

●

- கடந்த 26-3-99 ஆம் நாள் சென்னையில் நடந்த கன்னட திரைப்பட விழாவிற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பல்வேறு தமிழ் இயக்கங்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின. பெரியார் திராவிடர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம், தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி மற்றும் பல்வேறு அமைப்பினருடன் த.ஒ.வி.இ. தோழரும் கலந்து கொண்டனர். கலந்து கொண்டோர் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டு அன்று மாலை விடுவிக்கப்பட்டனர்.
- கடந்த 14-4-99 அன்று சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய வேத ஆகம எரிப்புப் போராட்டத்தில் த.ஒ.வி.இ தோழர்கள் கலந்து கொண்டனர். மயிலை சமஸ்கிருத கல்லூரி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த சென்ற நிலையில் சிறைப்படுத்தப்பட்ட அவர்கள் மாலை விடுவிக்கப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ்ச் சான்றோர் பேரவை

# அறுப்பவனை நம்பி ஏமாற வேண்டாம்...

அன்புத் தோழனுக்கு.

சிலவற்றை நாம் எளிதாக எடுத்துச் சொல்வதின் மூலம் அச்செய்தியையே எளிதானது என்று புரிந்து கொள்ளுகின்றனர்.

வலிவாக – எச்சரிக்கை கொள்ள வேண்டிய செய்தியைத் தோழமை உறவுக்காக நாம் அமைவாய்ச் சொல்வதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஒதுக்கிவிட்டுப் போகவே செய்கின்றனர்.

தோழனே, உனக்கு நினைவிருக்கிறதா – கடந்த மடலில்தான் தமிழ்வழிக் கல்விக்காகப் பார்ப்பனியம் தாமும் பேசி எப்படி இரட்டைவேடம் போடுகிறது என்பது குறித்து எழுதப்பெற்றிருந்தது.

ஒருபக்கம் இந்த ஆண்டைச் சமஸ்கிருத ஆண்டு என்று அறிவிப்பதும், மறுபக்கம் தமிழ் வழியிலேயே கல்வியை ஐந்தாம் வகுப்புவரைக் கட்டாயம் கற்க வேண்டும். எனத்திர்மானம் போடுவதுமே, இவர்களின் இரட்டை நடைமுறை.

திருச்சியில் நடந்த பா.ஜ.க. மாநாட்டில் இந்தத் திர்மானத்தைப் போட்டுவிட்டு ஐந்தாம் வகுப்பிற்குப்பின் இந்தியும் படிக்க வேண்டும் எனக் கேட்டிருக்கிறது பா.ஜ.க. அரசு.

அந்தத் திர்மானத்தின் பாதியை மட்டும் பார்த்துவிட்டோ என்னமோ பாரதிய ஜனதாக் கட்சித் திருந்திவிட்டதாய் எண்ணி மயங்கிப் போய்விட்டனர் தமிழ் அறிஞர்கள்.

எனவே பாரதீய ஜனதாவினரிடம் அகமகிழ்ந்தும், அதன் பொதுச்செயலாளர் இல.கணேசனை உறவு வழி உச்சி முகர்ந்தும் வரவேற்றனர் தமிழ்ச் சான்றோர்கள்.

தமிழ்வழிக் கல்வி வேண்டியும், தமிழில் படித்தோர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வேண்டியும் தமிழ்ச் சான்றோர் பேரவை ஒருங்கிணைத்து நடத்திய ஒருநாள் அடையாளப் பட்டினிப்போர் நிகழ்ச்சிக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசவந்த இல. கணேசன் தி.மு.க. அரசைக் கடுமையாகச் சாடியதோடு இந்த ஆண்டை சமஸ்கிருத ஆண்டாக அறிவித்ததுபோல் வருகிற ஆண்டைத் தமிழ் ஆண்டாக அறிவிக்க இருப்பதாகக் கூறவந்ததாகக் கூறியநிலையில், இளைஞர்கள், சூழ்ந்து கொண்டு அரட்டவே அந்த ஆள் அலறவே – அந்த ஆளை மிகப் பாதுகாப்போடு சான்றோர் பேரவையினரும் போலிஸ் துறையினரும் வழி அனுப்பி வைத்திருக்கின்றனர்.

முன்னதாக அந்நிகழ்ச்சிக்கு கணேசனை வந்துபோக இவர்கள் கேட்டதன் அடிப்படையிலேயே தான் வந்ததாக இல. கணேசனும் ஒப்புவித்திருக்கிறார்.

தோழனே பார்த்தாயா – இத் திருவிளையாடல்களைப் பார்ப்பனீயம் எப்படி நம்மையே கூறுபிரித்து நமக்குள் ஆட்டம் போடவைக்கிறது என்று.

தமிழ்வழிக் கல்வியில் பா.ஜ.க.விற்கு அக்கறை எவ்வாறு இருக்க முடியும். வடநாடுகளில் அவர்கள் இந்திவழிக் கல்விக்காகவும், இந்தி மொழியை மொழிப்பாடமாகப் படிக்கக் கட்டாயப் படுத்துவதற்காகவும் அவரவர்களின் தாய்மொழிக் கல்வியை ஏற்கின்றனர்.

இதே நிலையில்தான் தமிழ்வழிக் கல்வியையும், ஐந்தாம் நிலைக்குமேல் தொடர்ந்து இந்திப் படிப்பது தேவை என்றுமாக அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த பா.ஜ.க.வினர்க்கு உண்மையிலேயே தமிழ்வழிக் கல்வியில் அக்கறை இருக்குமே யானால், அவை முதலில் அவாள்களில் விவேகானந்தா வித்யாலயங்களிலும், இராமக்கிருஷ்ணா மிசன் பள்ளிகளிலும், பிற பார்ப்பனியக் கல்வி நிறுவனங்களிலும்



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் பூணூல் அறுபடாத வரை கருநாடகத் தமிழர்க்கு விடிவில்லை

கன்னடம் தெரியாததால் பத்தொன்பது தமிழர்க்கு வேலை இல்லை என்று விரட்டிய செயல் ஏதோ திடுமென நடந்துவிட்ட நிகழ்ச்சி இல்லை.

திட்டமிட்டு வளர்ந்திருக்கிற – வளர்க்கப் பட்டிருக்கிற நிகழ்ச்சி அது.

இதற்கு முன்பாக 1981 – ஆம் ஆண்டு தாய்மொழிக் கல்விக்காகப் போராடிய தங்கவயல் பகுதித் தமிழர்களைச் சுட்டுத் தள்ளி இருக்கிறது கருநாடக அரசு.

காவிரிச் சிக்கலில் நடுவர் மன்றத் தீர்ப்பை எதிர்த்து, கருநாடகத் தமிழர்க்கு எதிராகக் கலவரத்தை ஏற்படுத்தி அப்பாவித் தமிழர்களை எல்லாம் அடித்து நொறுக்கவும் விரட்டி அடிக்கவும் செய்தனர் கன்னடக் காடையர்கள்.

மக்களுக்கு எதிரான சட்டத்தினால் மக்களைத் தாக்கிலிடுவது என்பதற்குச் சற்றுக் குறைவாக நாடு கடத்துவது என்கிற வன்கொடுமைச் சட்டத்தையே நடைமுறைப்படுத்தி இருக்கின்றன இந்திய அரசும் – கருநாடக அரசும்.

கருநாடகத்தில் உள்ள அரசு அலுவலகங்களில், அது இந்திய அரசு அலுவலகமாகவே இருந்தாலும் அங்கு பணி செய்வதற்குக் கன்னடம் தெரிந்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு கன்னடம் தெரியாத தமிழர்கள் தமிழகத்திற்குப் போய்ப்பணி செய்யட்டும் – என்பதே கன்னட அரசின் கருத்து.

இச் செய்திகளின் அடிப்படையில் கருநாடகாவின் இரண்டு நிலைகளை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அங்கு வளர்ந்திருக்கிற கன்னட தேசிய உணர்வு என்பது அடிப்படையில் சரியானதே ஆனாலும், அது மற்ற அண்டை தேசிய இன மக்களுக்குக் குறிப்பாகத் தமிழர்க்கு எதிரானதாக வளர்க்கப்படுவது தவறானது.

இதன்மூலம் அவர்களுக்கு எதிரிகள் தமிழர்களே என்பது போலவே நடக்கின்றனர். கருநாடகங்களில் உள்ள மொழிச் சிறுபான்மையர் என்கிற அடிப்படையில்கூட தமிழர்களுக்கு எவ்வகை உரிமையும் மறுக்கப்படுகிறது. ஒரு மொழிவழிச் சிறுபான்மையர், குறிப்பாக அண்டை தேசிய இனமொழிவழிச் சிறுபான்மையர் தம் தாய்மொழி தமிழிலேயே கல்வி பயில எந்த உரிமையும் இல்லாமல் கிடக்கின்றனர். அவர்களுக்குத் தமிழ் ஒருபாட மொழியாக இருக்கிறதே அல்லாமல் பயிலும் மொழியாக இருந்திடவில்லை அவர்கள் தமிழிலே பயிலுவதும் – கருநாடகாவில் வாழ்கிற காரணத்தால் கன்னடத்தைக் கட்டாய மொழிப்பாடமாகப் பயிலுவது என்பதுமே சரியானதாக இருக்கும்.

- இத்தகைய நடைமுறையைக் கன்னட மக்கள் செய்யாமல், தமிழர்களுக்கு எதிரானதாகவே தங்களின் தேசிய உணர்ச்சியை வெறியாக்கிக் கொள்ளத் தூண்டப்படுகின்றனர்.

கன்னட தேசிய எழுச்சிக்கும், அதன் உரிமைக்கும் முழுத் தடையாக இருந்து கன்னட மக்களையும், தமிழக மக்களையும் எதிர்நிலைப்படுத்தி மோதவிடுகிற இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பை அவர்கள் எதிர்த்துப் போராடுவதில்லை.

இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்பை எதிர்த்துத் தம் தேசிய உரிமை எழுச்சிக்கு அணிதிரளாமல் – இந்திய பார்ப்பனியத்தோடு ஒட்டி உறவாடிக் கொண்டே அவற்றிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

இதனால் துளிர்விட்டுப் போகிற இந்தியப் பார்ப்பனியம் எளிதாய்த் தமிழர் – கன்னடரை பகைமைப்படுத்திவிடுகிற செயல்களையே மேற்கொள்ளுகின்றது.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே.

## முகத்திரை கிழிந்த இந்தியா

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே கூட்டம் என்று வாய்கிழியப் பேசுகிற வாஜ்பேயிகளால் ஒரே சட்டத்தைக்கூடப் பேணமுடியவில்லை.

கருநாடகாவில் உள்ள இந்திய அரசு அலுவலகங்களுக்கு வேலைவாய்ப்பில் தமிழக மக்கள் சேர்க்கப்படாமல் விரட்டப்படுகிற நிலையில் இந்தியாவில் உள்ள மக்கள் ஒரே இன மக்கள் இல்லை என்பது வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அவர்களின் ஒரே ஒட்டைச் சட்டமும் அங்கு ஒடிந்து செயலிழந்து போய்விட்டது.

பல்வேறு மொழி, இன, வாழ்வியல், பண்பாட்டுக்குரிய மக்களை இந்தியப் பூணூலில் எவ்வளவுதான் இறுக இறுகக் கட்டினாலும் அது இற்றுப் போவது உறுதி என்பதற்கான சான்றே இந்த நிகழ்வு.

மீண்டும் வேலை கொடுத்துவிட்டதாய்க் கதையளப்பு செய்து இச் சிக்கலுக்கு இந்திய முக மூடியை மாட்டிவிட்டிருக்கிறது பாரதிய ஜனதா அரசு.

வழக்கம்போல் இந்தியக் கட்சிகளெல்லாம் இச்சிக்கலுக்கு வாய்மூடிக் கொண்டன.

சில கட்சிகள் கருநாடகாவில் ஒரு பேச்சையும், தமிழகத்தில் ஒரு பேச்சையும் தம் இரட்டை நாக்கு கொண்டு பேசின.

இந்தியப் பார்ப்பனியக் கூட்டமைப்புக்குள் பூணூலால் அடைபட்டுக் கிடக்கிறவரை தமிழர்க்கு மட்டுமல்ல – கன்னடர்களுக்கும் விடிவில்லை.

www.padippakam.com

# விடுதலைக்கான களத்தில்...

**சாதிக் கொடூரன் எரிப்புப் போராட்டம்**

கடந்த மூன்றாண்டு களாகப் போகித் திருநாளை - சாதிக் கொடூரனைக் கொளுத்தும் நாளாக ஏற்று பெரும் போராட்ட நிகழ்வைச் செய்து வருகிறது த.ஒ.வி.இ இந்த ஆண்டும் கடந்த 14.1.99 அன்று சாதிக் கொடூரன் நிகழ்ச்சி பரவலாகப் பல இடங்களில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

**சென்னையில் :**

முன்னதாக சென்னையில் பத்து இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதோடு, மக்கள் நடுவில் நல்ல விளம்பரம் செய்யப் பெற்றிருந்தது. எண்ணூர், கொருக்குப்பேட்டை, சுங்கச்சாவடி, மூலக்கடை, பள்ளிகரணை, நுங்கம்பாக்கம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் சிறப்பாகப் போராட்டங்கள் நடந்தன. பொது மக்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டு சாதிக் கொடூரனின் உருவபொம்மையைக் கொளுத்தி, சாதி ஒழிப்பு முழக்கங்களை முழங்கினர். பரப்பல் முயற்சிகளில் திருவள்ளுவர் மழலையர் பள்ளி இறை பொற்கொடி அவர்களும் கலந்து கொண்டார்கள். மயிலாப்பூரில் மக்கள் எழுச்சி மன்றத்தினர் பெருந்திரளாய் முன்னின்று செய்தனர்.

**திருவள்ளூர்:**

திருவள்ளூர், கும்மிடிப் பூண்டி வட்டாரங்களில் உள்ள சிற்றூர்களில் கருத்துப் பரப்பல் செய்யப்பட்டு கும்மிடிப் பூண்டி சான்றோர் புத்தூரில் சாதிக் கொடூரன் நிகழ்ச்சி ஒருங்கிணைத்து நடத்தப் பெற்றது.

**வேலூர் :**

பாராஞ்சி, வந்தவாசி, கொடைக்கல் ஆகிய பகுதிகளைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் முன்னதாகப் பரவலாகப் பரப்பல் முயற்சிகள் நடத்தப்பட்டன. பாராஞ்சியில் கலை நிகழ்ச்சிகள் இரவு முழுக்க நடைபெற்றது. நிகழ்ச்சிகளில் பாவலர் தமிழேந்தி, வாலாசா வல்லவன் (மார்க்சியப் பெரியாரின் பொதுவுடைமைக் கட்சி) மற்றும் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கொடைக்கல் புரட்சியாளர் அம்பேத்கர் மன்றம், அரக்கோணம் - புரட்சிகவிஞர் கலை இலக்கிய மன்றம், பரவத்தூர் - புரட்சியாளர் அம்பேத்கர் மன்றம், - சின்ன பரவத்தூர் - அம்பேத்கர் மன்றம், அம்மனூர் - அம்பேத்கர் மன்றம், அரக்கோணம் - அம்பேத்கர் மாணவர் வளர்ச்சி இயக்கம், பாராஞ்சி அம்பேத்கர் நற்பணி மன்றம், தக்கோலம் அம்பேத்கர் மன்றம், மேல்களத்தூர் - அம்பேத்கர் மன்றம், ஐப்பேடு - அம்பேத்கர் மன்றம் ஆகியவை பங்கேற்றன.

**ஈரோடு :**

ஈரோட்டில் நாளங்காடி சந்தை வணிகர் சங்கமும், த.ஒ.வி.இ. யும் இணைந்து நிகழ்ச்சியைச் சிறப்புற செய்தனர்.

சாதிக் கொடூரனைக் கொளுத்திய நிகழ்வு முதல் நாளில் நடக்க மறுநாள் மக்கள் கலைஞர் கே.ஏ. குணசேகரின் தன்னோனே கலைக்குழுவின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி சிறப்புற நடந்தது.

● பாவலரேறு பெருஞ்சித்திரனார் பேரவை கடந்த 13.1.99 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் தொடங்கப் பெற்றது. திருவாளர்கள் அரு.கோபாலன், பொ.வே.பக்தவச்சலம், க.ப. சின்னராசு, அ.சி. சின்னப்பா, இறை பொற்கொடி ஆகியோருடன் த.ஒ.வி.இ. சார்பில் கதிரவன், உதயன், கயல் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

● கடந்த 6-2-99 அன்று சென்னை மேடவாக்கத்தில் மேடவாக்கம் தமிழ் மன்றம் தொடங்கப்பெற்றது. திரு. குணத்தொகையன் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் தாமரை பெருஞ்சித்திரனார், சாலை இளந்திரையனார், புலவர் இறைக்குருவனார், அருளியார், அரு.கோபாலன், இன்குலாப், கே.இ.பாசுகரன், இறை. பொற்கொடி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அந்நிகழ்ச்சியில் பகுதியைச் சார்ந்த பல்வேறு அமைப்பினர் கலந்து கொண்டு உரையாற்றினர். தோழர் மாந்தநேயன் (த.ஒ.வி.இ.) அனைவரையும் வரவேற்றார்.

● கடந்த 17-04-99 காரிக்கிழமை அரக்கோணத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் - மதவெறி எதிர்ப்பு நாள் பேரணி-பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. மதவெறி எதிர்ப்புக் கூட்டணி ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சியில் பல அமைப்புத் தோழர்கள் கலந்துகொண்டனர். பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் த.ஒ.வி.இ. தோழர்கள், ஒருங்கிணைப்பாளர் இளங்கோவன் , செந்தழல் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.



படிப்பகம்

# மாறனே! தோழனே!



இந்தியப் பொய் நொறுங்க..
நீ வெடித்து!
பத்து ஆண்டுகள்
செத்துப் போன பின்னும்
அத்துப்போக அடிமை விலங்கோடு
தோழனே! உனை நினைக்கிறோம்.

விண்ணில் கழுகுகள் அலையும்போது...
எம் வீட்டுக் குஞ்சுகள் அலறும்போது...
கொடுமையின் வாள்கள் நீளும்போது...
எம் குரல்வலை அறுந்து கதறும்போது...
இந்திய வேதம் ஓதும்போது...
எம் செவிகளில் ஈயம் இறங்கும்போது...
அந்நிய நஞ்சு பரவும்போது...
எம் அன்னையர் சாவில் துவளும்போது...
கணக்கிலாத் துன்பங்கள் உடைக்கும்போது...
எம் கண்ணீர் அடக்கி உறையும்போது...
தோழனே! உனை நினைக்கிறோம்

அடக்கப்பட்ட கண்ணீர்!,
ஆயிரமாயிரம்
வெடிகுண்டுகளுக்கு நிகரென
எதிரிகள் அறியும் காலம் வரும்
உன் வெடிப்பில்
தேசம் மலரும்.

சாதி-மத-பார்ப்பன வெறியை வளர்க்கும்

## சமஸ்கிருத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு

நாள் : 6-6-99

இடம் : சென்னை,பெரம்பூர்

சாதித் தீயை ஓதி வளர்க்கும்,
வேத மொழியின் வேரறுப்போம்!

கருவறை இருட்டில் மதவெறியூட்டும்,
தேவ பாசையின் திமிரழிப்போம்!

சரியும் தமிழகம் சரியாதுயர
சமஸ்கிருத, பார்ப்பனிய முடிசாய்ப்போம்!